# மின்நிலா

ஜூலை 27, 2020





engalblog.blogspot.com

எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...

**இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...**

engalblog@gmail.com

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**

**நன்றி.**

அட்டைப்படம் : மலர்களிலே பல வடிவங்கள்!

படம் அனுப்பியவர் : K G Y ராமன்

============

பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள்

அனுப்பியவர் : kayjee / S Kumar

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

மின்நிலா 009 (முந்தைய இதழ் சுட்டி)

## பொருளடக்கம் பக்கம் எண்

பீன்ஸ் பருப்புசிலி - ரமா ஸ்ரீநிவாசன் ............................2
கிராமத்துக் குயிலோசை :: ரமா ஸ்ரீனிவாசன்........... 8
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ......... 18
கேள்வி பதில்.......................................................................20
கதை போல ஒரு நிஜம் ஸ்ரீராம்.................................... 25
பலசரக்கு :: ஸ்ரீராம்.......................................................... 29
கதை நிஜமானது! - ரஞ்சனி நாராயணன்..................36
அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி...........................39
வாழ்விலும் தாழ்விலும் விலகிடாத நேசம்............43
எழுதும் முறைகளிலும் பொருள்களிலும் நிறைய மாற்றங்கள்! Kayjee........................................................ 46
+ + இருண்ட வானில் ஒளிக்கீற்று................................ 48
ஆண்டாளின் அருள் ... ரமா ஸ்ரீநிவாசன்......................51
சுவாரஸ்ய பகிர்வு KGG........................................................56
ஞாயிறு படங்களும் வாசகர் கைவண்ணமும்!......63

(குறிப்பு : நீல நிற தலைப்பு கொண்ட பகுதிகள் மின்நிலாவில் மட்டுமே வெளியிடப்படுவன )

# பீன்ஸ் பருப்புசிலி - ரமா ஸ்ரீநிவாசன்



பருப்புசிலி என்பது நம் வீடுகளில் பெரியவர்கள் அடிக்கடி சமைக்கும்சுவையான பண்டமாகும். இக்காலத்தின் வேகத்தையும் பணி புரியும் பெண்களின் அவசரத்தையும் மனதில் கொண்டு இப் பண்டம் இந்நாட்களில் விருந்துகளுக்கு மட்டுமே செய்யப்படும் ஓர் அரிய உணவாக மாறிவிட்டது!


இந்த கோவிட்டின் வேண்டா வருகையினால் யாவரும் வீடடங்கி இருக்கும் நிலையில் ஏதோ வித்தியாசமாக சமைப்போமென்று என் அம்மாகற்று கொடுத்தாற் போல் சமைத்தேன். அருமையாக வந்தது. கடவுள் சித்தம் என் அதிர்ஷ்டம்.

வேண்டிய பொருட்கள் :
(நான் மூன்று பேருக்கு அளவு கூறியுள்ளேன்)

**பீன்ஸ் : ¼ கிலோ**
**துவரம்பருப்பு : ஒரு காபி டவராவில் ¾ பங்கு.**
**(நல்ல சுடும் நீரில் ½ மணி நேரம் ஊற வைக்கவும்)**
**சிவப்பு மிளகாய் : 5**
**(இவைகளையும் து.பருப்புடன் ஊற வைக்கவும்)**
**உப்பு : தேவைக்கேற்ப**
**பெருங்காயம் : ஓர் சிட்டிகை**
**மஞ்சள் பொடி : ஓர் சிட்டிகை**
**கருவேப்பிலை : 10 இலைகள்**
**எண்ணெய் : 6 டீஸ்பூன்கள்**

செய்முறை :

எங்கள் வீட்டில் பெரியவர்கள் உள்ளதால், பீன்ஸை முதலில் குக்கரில் நன்றாக வேக வைத்து வடி தட்டில் வடி கட்டி வைத்து விட்டேன். நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கு வேக வைத்துக் கொள்ளுங்கள்.



**இப்போது வாணலியில் மேலும் இரண்டு டீஸ்பூன்கள் எண்ணெய் சேர்த்து அரைத்து வைத்த விழுதை சேர்த்து நன்றாகக் கிளறவும். முதலில் வாணலியின் பக்கங்களில் ஒட்டிக் கொண்டாலும், சிறிது சிறிதாக வேக வேக சரியாகி விடும். இவ்விழுது நன்றாக வேக, அதை நன்றாக கிளறி விட்டு ஒரு கரண்டியை வைத்து தட்டைப் போட்டு மூடி விடவும். ஐந்து நிமிடங்கள் வெந்த பின் தட்டை எடுத்து விட்டுக் கிளறவும். விழுதாக இருந்தது சிறிது உதிர ஆரம்பிக்கும். மறுபடியும் ஒரு டீஸ்பூன் எண்ணெய் சேர்த்து ஐந்து நிமிடங்கள் கரண்டி, தட்டை வைத்து மூடி விடவும்.**

பிறகு பார்த்தால், விழுது பொலபொலவென எண்ணெய்ப் பசையுடன் மணலைப் போல் உதிர்ந்திருக்கும்.

சிறிது கையிலெடுத்து அழுத்திப் பார்த்தால் கையில் ஒட்டாமல் விழும்.

இப்போது நன்றாக வெந்து விட்டதென்பது தெரியும்.




இச்சமயம் வடி கட்டி வைத்திருக்கின்ற பீன்ஸ்ஸை ஒவ்வொரு பிடியாக எடுத்து சிறிது அமுக்கி பிழிந்தால் உள்ளிருக்கும் நீர் வடிந்து விடும்.

**இவ்வாறு ஒவ்வொரு பிடியாக எடுத்து விழுதுடன் கலக்கவும்.**



வேண்டிய அளவு உப்பு, ஒரு சிட்டிகை பெருங்காயம், ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி மூன்றையும் சேர்த்து, பீன்ஸை நன்றாகக் கிளறவும். யாவும் ஒன்று சேர்ந்த பின்னர், நல்ல பச்சை பசேல் என்றிருக்கும் கருவேப்பிலையை சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும். சுவைத்துப் பாருங்கள்.

அருமையாக இருக்கும்.




**எங்கள் வீட்டில் இதற்கு தோதாக பரங்கிக் காயோ அல்லது வெங்காயமோ சேர்த்து வற்றல் குழம்பு சமைத்து, மிளகு ரசம் வைத்து உண்போம்.**







மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# கிராமத்துக் குயிலோசை :: ரமா ஸ்ரீனிவாசன்

மும்பையில் திரு. பிரகாஷ் அவர்கள் ஒரு பெரும் தனியார் நிறுவனத்தில் ஸீனியர் டெக்னிகல் அனலிஸ்டாக, கடந்த பன்னிரண்டு வருடங்களாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி சுஜாதா, தனியார் கல்லூரியில் எட்டு வருடங்களாக கணிதவியல் பேராசிரியையாக பணி புரிந்து வந்தார். அவர்களுக்கு ஆண்டவன் ஒரே ஒரு செல்ல மகனை கொடுத்திருந்தார்.



கோடிக் கணக்கான சொத்துக்கள் வங்கிகளில் பணமாக மாறி உட்கார்ந்து கொண்டிருந்தது. படகு கார்கள் இரண்டில் மூவரும் எந்த கவலையும் இன்றி வலம் வந்தனர். மகன் பெயர் ஸூரஜ். மும்பையிலேயே பெயர் பெற்ற பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். எந்த ஏக்கமும் இல்லாமல், எந்த ஆதங்கமும் இல்லாமல் வளர்த்தார்கள் அவன் பெற்றோர். விலையுயர்ந்த பொருட்கள், விலையுயர்ந்த துணிகள், விலையுயர்ந்த புத்தகங்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம். ஸூரஜ்ஜிற்கு சந்தோஷம் அன்றாட சுவையாகி விட்டது. வெளியுலகத்தை பற்றியோ அங்கு

நிலவும் வறுமையை பற்றியோ அவனுக்கு ஒன்றும் தெரியாமல் நாட்கள் ஓடின.

ஒவ்வொரு வருடமும் தன் பிறந்த கிராமமான காஞ்சிபுரத்தின் அருகேயுள்ள சந்தைவாசலுக்கு தன் மகனை கூட்டிச் சென்று கிராம சூழலையும் கிராம வாழ்க்கையையும் காண்பிக்க வேண்டுமென்று பிரகாஷ் விரும்பினார். ஆனால் அந்த ஆசை நிறைவேறாமலே இருந்து வந்தது. எனவே, இந்த வருடம் மூன்று மாதங்களுக்கு முன்னரே தன் மேலதிகாரியிடம் ஒரு மாத விடுப்பிற்கு அனுமதி வாங்கி, தனக்கு பதிலாக மற்றொருவரையும் தயார் செய்து விட்டார். அவரது மனைவி சுஜாதாவும் மிக குஷியாக தன் கல்லூரியிலும் விடுப்பனுமதி பெற்று விட்டார்.

சந்தைவாசலில் உள்ள தன் குடியானவர்களை தொடர்பு கொண்டு தன் வீட்டையும் தண்ணீர் வசதி, மின்சார வசதி யாவற்றையும் சரி பார்த்து வைக்க சொல்லி ஏற்பாடு செய்து விட்டார் பிரகாஷ்.

குடியானவர்களுக்கோ ஒரே குஷி. இருக்காதா? ஐந்து வருடங்கள் கழித்து எஜமானர் வருகின்றார். அதுவும் மனைவியையும் மகனையும் அழைத்து வருகின்றார். அவர் வீட்டை ஒரு அரண்மனைப் போல் ஜோடித்து, புது கட்டில்கள், நாற்காலிகள், மின்சார விளக்குகள் என தூள் கிளப்பி விட்டார்கள்.

பிரகாஷ் குடும்பம் கிளம்பும் நாளும் வந்தது. மூவரும் விமானம் மூலம் சென்னையை அடைந்து அங்கிருந்து காரில் சந்தைவாசல் கிளம்பினர். ஸூரஜ்ஜிற்கோ தலை கால் புரியவில்லை. எங்கோ சிகாகோவோ, லண்டனோ போவது போல் தன் துணிமணிகளையும்,

பொம்மைகளையும், தின்பண்டங்களையும் எடுத்து வைத்துக் கொண்டான். தன் தந்தையிடம் மறக்காமல் கேமராவை எடுத்துக் கொள்ள சொன்னான்.

கார் நகர நகர, ஸூரஜ்ஜிற்கு எல்லாமே புதியதாக இருந்தது. நாகரீகமான நகரித்திலேயே வாழ்ந்த ஸூரஜ்ஜிற்கு வயல்வெளிகளும், ஜிலுஜிலு காற்றும், நீர் நிலைகளும் அதிசயமாக இருந்தன.



அவ்வப்பொழுது காரை நிறுத்தி இறங்கி ஆள் நடமாட்டமில்லாத சாலையில் ஓடுவதும் நடப்பதுமாக ஆட்டம் போட்டான். பிரகாஷிற்கு பெருமை தாங்கவில்லை. சுஜாதாவும் மிக குஷியாக இருந்தாள். ஒன்றாக சேர்ந்து மூவரும் வெளியே செல்வது யாவருக்கும் சந்தோஷமாக இருந்தது.

ஒரு மணி நேரம் கார் ஓடிய பின்னர், சாலையோரம் இருந்த இளநீர் வியாபாரியிடம் இளநீர் வாங்கி ஒவ்வொருவரும் அருந்தினர். இவை யாவும் ஸூரஜ்ஜிற்கு புதிய அனுபவங்களாக இருந்தன.



வயலோரங்களில் வண்டியை நிறுத்தி நிலக்கடலை பயிர்கள் சிலவற்றை அப்படியே பிடுங்கி, அவற்றிலிருந்து நிலக்கடலைகளை உருவி பிரகாஷ் சுஜாதாவிற்கும் ஸூரஜிற்கும் கொடுத்து மகிழ்ந்தார். அவருக்கு தன் மனைவியையும் மகனையும் இவ்வளவு சந்தோஷமாக பார்ப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.



ஒன்றரை மணி நேரம் பிரயாணம் செய்து கடைசியில் சந்தைவாசல் வந்து சேர்ந்தனர். கும்பலாக குடியானவர்கள் வழி மேலே விழி வைத்து காத்திருந்தார்கள். காரைக் கண்டவுடன் அத்தனை பேரும் ஓட்டமாக ஓடி வந்து ஆர்ப்பரித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். பிறகு ஒவ்வொரு பெட்டியாக பிரகாஷின் வீட்டிற்குள் அவர்களே கொண்டு வைத்தார்கள். சுஜாதாவும் ஸூரஜ்ஜும் ஆச்சரியமாக பார்த்தார்கள்.

ஒரு வாரத்திற்குள் அவர்களின் அன்பிலும் அரவணைப்பிலும் மூவரும் திக்கு முக்காடிப் போயினர்.

குடியானவர் ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் விதவிதமான உணவுகளும் பலகாரங்களும் வந்த வண்ணம் இருந்தன. சாப்பிடுவதுதான் மூவருக்கும் சிரமமாக இருந்தது. ஆனால், மூவருமே இவ்வளவு சுவையுள்ள நேர்த்தியான உணவுகளை மும்பை ஹோட்டல்களில் கூட உண்டதில்லை. இவை யாவும் வீட்டிலேயே அன்புடன் செய்யப்பட்ட திண்பண்டங்கள்.

நாட்கள் நகர நகர, ஸூரஜ் அங்கிருந்த குழந்தைகளுடன் மிக யதார்த்தமாக பழகி தன் விளையாட்டு சாமான்கள், புத்தகங்கள் யாவற்றையும் பகிர்ந்து சந்தோஷித்தான். சுஜாதாவுமே அவர்களின் அன்பையும் அக்கரையையும் கண்டு அசந்து போனாள்.

ஆனால், ஸூரஜ்ஜிற்கு ஒரு சந்தேகம் வந்தது. அவன் அப்பாவிடம் சென்று “அப்பா, என் ஃப்ரெண்ட்ஸ் எல்லோரும் நல்ல துணிகள், நல்ல புதிய புத்தகங்கள் வைத்திருக்கின்றார்கள். இந்த குழந்தைகள் ஏன் அப்படி இல்லை?” என்று வினவினான். பதில் சொல்லத் தெரியாமல் பிரகாஷ் திண்டாடினார்.

எல்லோர் வீடுகளிளும் நாய்களும், மாடுகளும், ஆடுகளும் வீட்டு மனிதர்கள் போல் அன்புடன் வளர்க்கப் பட்டன. அதே போல் வயல்களும் செடிகளும் உயிரினும் மேலாக பாதுகாக்கப் பட்டன.

அனைத்து குழந்தைகளும் காலை எழுந்தவுடன் ஆற்றங்கரைக்குச் சென்று நன்றாக வேப்பங்குச்சியை வைத்து பல் துலக்கி விட்டு அந்த ஆற்றிலேயே தங்கள் துணிகளை துவைத்து சுத்தமாக குளித்து விட்டு வந்தனர். ஸூரஜ் அவர்களுடனேயே பொழுதைக் கழித்ததால், அவனும் தன் துணிகளை துவைக்கவும் ஆற்றில்

குளிக்கவும் நீச்சல் அடிக்கவும் கற்று கொண்டான். அவனுக்கு நான்கு சுவர்களுக்கு அப்பால் உள்ள ஒரு வாழ்க்கை இப்போதுதான் புரிய ஆரம்பித்தது.

முதல் முறையாக உண்மையான சுதந்திரத்தை அனுபவித்தான். குழாய் தண்ணீரையே பார்த்தவனுக்கு ஆற்று நீர் நெகிழ்ச்சியை தந்தது. தாங்கள் மும்பையில் விலை கொடுத்து வாங்கும் உணவுகள் அவனுக்கு இப்போது ரசிக்கவில்லை. இங்கு ஒவ்வொருவர் வீட்டிலும் விளையும் காய்கறிகளையும் கீரை வகைகளையும் வைத்து சமைக்கும் உணவு அறுசுவையைத் தந்தது.

இரவில் எல்லா குழந்தைகளும் ஒன்றாக நாலு அல்லது ஐந்து கயித்துக் கட்டில்களை போட்டுக் கொள்வார்கள். ஒரு பெரியவர் படுத்துக் கொண்டே இதிகாஸக் கதைகளையும் புராணக் கதைகளையும் சுவைபடச் சொல்ல அவைகளை கேட்ட படியே நிலா வெளிச்சத்தில் நட்சத்திரங்களின் போர்வையில் அரட்டை அடித்த வண்ணம் பிள்ளைகள் தூங்கி விடுவார்கள்.

ஒரு நாள் மாமரங்களின் மீது ஏறி மாங்காய்களையும் மாம்பழங்களையும் பறித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் தவறி கீழே விழுந்து வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது. அவ்வளவுதான். ஊரே திரண்டு பிரகாஷிடம் வந்து அவரது காரை எடுக்குமாறு வேண்டினர். அடுத்த கிராமத்திலிருந்த ஹாஸ்பிடலிற்கு கூட்டிச் சென்று வைத்தியம் செய்து காலுக்குக் கட்டுப் போட்டு திரும்பும் வரையில் அவனது அம்மாவுடன் நான்கு பெண்களும் அவனது அப்பாவுடன் சில ஆண்களும் துணையிருந்து தெம்பு கொடுத்து வீட்டில் வந்து சேர்ந்ததும் மூவருக்கும் உணவு கொடுத்து ஆசுவாசப் படுத்தியதைப் பார்த்த சுஜாதாவிற்கும் ஸூரஜ்ஜிற்கும் ஆச்சரியம் தாங்கவில்லை.

நாலு சுவர் என்னும் அடுக்கு மாடி கட்டிடத்தில் வாழ்ந்த அவர்களுக்கு இந்த நேசமும் பாசமும் புதிதாக இருந்தது. அந்த பிள்ளை எழுந்து நடமாடும் வரையில் அவனுக்கு வேண்டிய ஒத்தாசையை மற்ற குழந்தைகளும் அவனது பெற்றோரின் செலவிற்கான பணத்தை மற்ற ஜனங்களும் பகிர்ந்து வாழ்ந்த வாழ்க்கை அவர்களுக்கு ஒரு படிப்பினையாக அமைந்தது.

அதே போல் மும்பையில் வாட்ச்மேனும் பாதுகாப்பு அலாரமும் பார்த்து பழகியவர்களுக்கு நட்பு என்கின்ற பாதுகாப்பை பற்றி அறவே தெரியவில்லை. ஆனால், அந்த கிராமத்திலே எதாவது ஒரு குடும்பத்தில் ஒரு துன்பமோ நெருக்கடியோ வந்து விட்டால், அனைத்துக் குடும்பங்களும் ஒன்று சேர்ந்து நின்று அதற்கு மாற்று ஏற்பாடும் செய்து அத் துன்பத்தை முதலில் ஒழித்து விடுவார்கள். ஒருவருக்கு ஒருவர் பாலமாக இருந்தனர்.

அக்கிராமத்தில் டெலிவிஷன் பெட்டிகள் என்ற “இடியட் பாக்ஸ்”களே கிடையாது. மாலை நேரங்களில் பொதுவாக எல்லாக் குடும்பங்களும் ஒன்றெனக் கலந்து கூட்டாக உண்டு பழகி, உறவாடி பொழுதை நல்ல முறையில் செலவழித்தார்கள்.

நாம் யாவரும் “உலகம் என் கையில்” என்று இறுமாந்து இருக்கும்போது, அவர்கள் “நாங்கள் யாவரும் தெய்வத்தின் கையில்” என்று நம்பிக்கையுடன் நின்றார்கள்.

இவ்வாறாக பிரகாஷ், சுஜாதா, ஸூரஜ் குடும்பம் தங்கள் ஒரு மாத விடுமுறை நாட்களை மனமகிழ்ச்சியுடன் கழித்து விட்டு திரும்பிப் பார்ப்பதற்குள் விடுமுறையே முடிந்து விட்டது.

மும்பைக்கு திரும்பும் நாளும் வந்தது. விடிகாலையிலிருந்தே குடியானவர்களும் குழந்தைகளும் வந்த வண்ணம் இருந்தனர். நான்கு பலாப்பழங்கள், ஒரு கூடை மாம்பழம், அனைத்து காய்கறிகள், வாழைத் தார்கள், பருப்பு வகைகள், புளி, அரிசி மூட்டை என ஏகப்பட்ட பொருட்கள் வந்து குவிந்தன.

ஆயின், யார் முகத்திலும் ஈயாடவில்லை. ஸூரஜ், சுஜாதா உள்பட அனைவரும் சோகமே உருவாகக் காணப் பட்டனர். ஸூரஜ் தன் நண்பர்கள் அனைவரையும் கட்டித் தழுவி விடை பெற்றான். அத்தனைக் குழந்தைகளும் கண்ணீர் விட்டு அழுததை பார்த்த ஸூரஜ் தானும் கண் கலங்கி விட்டான்.

குடியானவர்கள் அனைவரும் பிரகாஷையும் சுஜாதாவையும் தங்கள் வீட்டு மகனும் மருமகளும் போவது போலே மனமுடைந்து அழுதனர். தங்களால் முடிந்த புடவையும், வேட்டியும் ஸூரஜ்ஜிற்கு சட்டையும் வாங்கி வந்தனர். உடனே சுஜாதாவும் ஸூரஜ்ஜும் புதுத் துணிகளை அணிந்து வந்ததைப் பார்த்த பிரகாஷ் நெகிழ்ந்து போனான். தானும் புது வேட்டியை உடுத்திக் கொண்டு, அவர்களிடம் விடை பெற்று, மூவரும் கிளம்பினர்.

சென்னையை நோக்கி கார் பயணித்துக் கொண்டிருந்த போது, பிரகாஷ் ஸூரஜ்ஜிடம் மிக கர்வத்துடன் “மகனே, இந்த விடுமுறை உனக்கு பிடித்திருந்ததா?” என்று கேட்டார். ஸூரஜ்ஜோ குஷியுடன் பதிலளித்தான். “அப்பா, ரொம்பப் பிடித்திருந்தது அப்பா. ஏனெனில், நாம் எவ்வளவு ஏழ்மையான நிலையில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை எனக்கு காண்பித்திருக்கிறீர்கள். அதற்கு மிக்க நன்றி” என்றான்.

அதிர்ச்சியடைந்த அப்பா "என்னப்பா சொல்லுகின்றாய்" என்று கேட்டார்;

ஸூரஜ் நிறுத்தி நிதானமாக பதில் கூறினான். "அந்த கிராமத்தில் வாழும் அனைவரும் ஒன்றாக ஒரு குடும்பமாக பாசத்துடனும் ஆசையுடனும் ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்கிறார்கள். நாமோ, பணம், பதவி, அந்தஸ்து, கௌரவம் என்று புரியாத சிலதின் பின்னால் நில்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றோம். டீ.வி. இல்லாத வீட்டையும், ஏ.சி. இல்லாத படுக்கையறையையும் இப்போதுதான் பார்த்தேன். பர்கர் இல்லாத உணவும் கொக்கோ கோலா இல்லாத கரும்புச்சாறும் அவைகளை விட இன்னும் அதிகம் சுவைக்கும் என்பதை இவர்களிடமிருந்து கற்று கொண்டேன். ஒன்றாய் மகிழ்ந்து வாழும் குடும்பத்தையே இங்குதான் கண்டேன். அதிசயப்பட்டேன். இவை எல்லாம் விடுங்கள். அந்த குழந்தைகளிடம் இருந்த உயிரைக் கொடுக்கும் நட்பை பார்த்து இன்னும் ஆச்சரியத்திலிருந்து மீளாமல் திகைத்திருக்கின்றேன்" என்றான்.

"நாம் வாழும் வாழ்க்கை படாடோபமும் பகட்டு செயல்களும் நிறைந்தது. அவர்களோ உண்மையான கள்ளமற்ற மேன்மையான வாழ்க்கையை வாழ்கிறார்கள். எனவே, என்றும் அவர்கள் நம்மை விட உயர்ந்தவர்கள், பணக்காரர்கள், பண்பானவர்கள். நான் அவர்களிடமிருந்து பல வாழ்க்கைப் பாடங்களை கற்றுக் கொண்டேன். அவை என் வாழ்நாள் முழுதும் என்னுடன் வந்து என் எதிர்கால சந்ததியினருக்கும் போய்ச் சேரும்" என்று முடித்தான்.

பேச்சிழந்த பிரகாஷிற்கு ஒன்று தெளிவாகப் புரிந்தது. பணத்தால் நாம் பெரியவர்களாவதில்லை. எளிமை, அன்பு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது, நல்ல நட்பு, நல்லெண்ணங்கள், அமைதியான குடும்பம்

ஆகியவையே இவ்வாழ்க்கையின் வரப் பிரசாதங்கள். இவை யாவையும் விட நமக்கும் நம் இறைவனுக்கும் இருக்கும் ஒரு ஆத்மார்த்தமான தொடர்பு. இவையே நாம் வல்லவர், நல்லவர் என்பதற்கு அசைக்க முடியாத அளவு கோலாகும்.

ஒரு மனிதன் எவ்வளவுதான் பணமும் புகழும் ஈட்டினாலும், அவன் மனம் சுத்தமில்லை எனில், அவன் மிகவும் பரம ஏழைக்கே சமானம் என்பதுதான் உடைக்க முடியாத உண்மை.

ஆகவே, இவ்விடுமுறை ஸூரஜ்ஜிற்கு மட்டுமல்லாது, பிரகாஷ், சுஜாதா ஆகிய இருவருக்கும் கூட ஒரு படிப்பினையாக அமைந்தது.



மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




LINK :

INDIA : https://www.amazon.in/dp/B08CXBPPYN

US : https://www.amazon.com/dp/B08CXBPPYN

UK :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN



மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

ஒரு ஞானி இன்னொரு ஞானியை எப்படி அடையாளம் காண்பார் ?

# கேள்வி பதில்

ஏஞ்சல் :

1, மூக்குமேல் கோபம் என்றால் என்ன ?

# ஆதி மனிதர்கள் ஆற்றைக்கடக்கும்போது நீர்மட்டம் மூக்குக்கு மேல் போனால் ஆபத்து எனக் கருதியதால் மூக்குக்கு மேல் கோபம் ஒரு அளவீடு ஆனது.

& மனித உடலில் மூக்குக்கு மேலேதான் கண்கள், மூளை எல்லாம் நிறுவப்பட்டிருக்கின்றன. கோபம் வந்தால் கண்கள் சிவக்கும், மூளை பழிவாங்கத் துடிக்கும். அதனால்தான் மூக்குக்கு மேலே கோபம் என்று சொல்கிறார்கள் போலிருக்கு. (மூக்குக்குக் கீழே கோபம் வந்தால் ஒரே கடியா கடிச்சுடுவாங்களோ!)

2, ஒருவருக்கு ஞானம் கிடைக்க எத்தனை வருஷம் அல்லது மாதங்கள் ஆகும் ?

$ புத்தருடைய சீடர்களில் ஒரு சிலருக்கு சீக்கிரமே ஞானம் லபித்தது என்கிறார்கள். திருஞான சம்பந்தருக்கு 5 இல் கிட்டியது பலருக்கு 60 இல் கூட...?

# சுமார் இரண்டொரு நாட்கள் ஆகலாம் !!

& ஞானம் கிடைக்கவேண்டும் என்று இருந்தால் எந்த வயதிலும் சில வினாடிகளில் கிடைக்கும்.

3, ஒரு ஞானி இன்னொரு ஞானியை எப்படி அடையாளம் காண்பார் ?

$ ஏஞ்சல் அதிராவை எப்படி அடையாளம் கண்டார்?

# பாம்பின் கால் பாம்பறியும். இயல்பான திறன்.

& யோசித்துப் பார்த்தால், எந்த ஞானியும் மற்றவர்களை 'அடையாளம் காண' நேரத்தை வீணடிப்பதில்லை. ஞானிக்குத் தெரியும் மற்றவர்களை அடையாளம் கண்டுகொள்வதால் தனக்கோ மற்றவர்களுக்கோ எந்தப் பயனும் இல்லை என்று.

4, எனக்கு வீட்டில் கழுதைக்குட்டி பன்னிக்குட்டி இதெல்லாம் வளர்க்கணும்னு சமீபகாலமா ஆவல் அதிகரிக்குது இதன் காரணம் என்னவா இருக்கும் ?

$ வீட்டில் துள்ளி விளையாடும் குழந்தைகள் இல்லை போல் ... !

# எதிர்த்துப் பேசாத ஜீவன்களோடு சிலகாலம் வாழ ஆசையாக இருக்கலாம்.

& அதோடு நிறுத்திக் கொள்ளக்கூடாது. பாம்புக் குட்டி, புலிக்குட்டி, சிங்கக்குட்டி என்று ஆசையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். முடிந்தால், ஏதேனும் மிருகக் காட்சிசாலையில் ஓய்வு நேர பணியாற்றலாம்.




5, உலகமே கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருக்கு ஏழை பணக்காரர்னு மிச்சம் வைக்கலை இப்படிப்பட்ட சூழலில் big b குடும்பத்தினருக்கு கொரோனா குணமாக யாகம் வளர்க்கும் சிலர் எவ்வகையைச் சார்ந்தோர் ? இதை படிச்சு கோபம் வருவது நியாயம் தானே ? 8.5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டப்போ யாகம் செய்யாதவங்க இவங்களுக்கு செய்வது எதை நோக்கி செல்கிறது சமூகம் ?

$ இனிப்போ பலகாரமோ விளையாட்டுப் பொருள்களோ ஊரிலிருக்கும் எல்லாக்குழந்தைகளுக்குமா வாங்குகிறீர்கள்? அது போல் அவருக்கு பிடித்தமானவர்க்கு அவர் அருள் கேட்டுப் பிரார்த்திக்கின்றனர்.

# பிரபலங்களால் கவனிக்கப்பட வேண்டும் என்ற உந்துதல் காரணமாக இந்த மாதிரி நடக்கிறது. இதைக் கண்டு நகைப்பு வரவேண்டுமே தவிர கோபப்பட்டுப் பயனில்லை. சமூகம் எதை நோக்கியும் செல்லவில்லை, இது ஒரு ஃப்ரீக் செயல்பாடு.

& நான், கூடுவாஞ்சேரி குப்பன் அவர்கள் கொரோனா பாதிப்பிலிருந்து குணமாக யாகம் செய்கிறேன் என்று

சொன்னால் யாருக்கும் குப்பனையும் தெரியாது; என்னையும் தெரியாது. விளம்பரம் கிடைக்காது. ஆனால் நான் அமிதாப், அபிஷேக், ஐஸ்வர்யா குணமாகவேண்டும் என்று சொல்லி கற்பூரம் ஏற்றினால் கூட என் பெயர் பிரபலமாகிவிடும்!

நெல்லைத்தமிழன் :

1. கோவில்ல சிறப்பு தரிசனம் என்ற பெயரில் கோவில் வருமானத்துக்கு வழிவகை செய்துகொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்?

& அப்படி வருகின்ற 'கோவில் வருமானம்' யாருக்குப் போய் சேர்கிறது என்பதுதான் கேள்வி.

2. டைம் மெஷினில் கடந்த காலத்துக்குச் செல்ல முடிந்தால், எந்த குணத்தை, செயலைத் திருத்திக்கொள்வீர்கள்?

# டைம் மெஷினில் கடந்த காலத்துக்குச் செல்லலாமே தவிர, குண விசேஷங்களை மாற்ற இயலாது. அப்படி முடியுமானால் பொறுமையின்மை, முன் யோசனைக்குறைபாடு, அடங்காத ஆசைகள் என நீக்க நினைப்பது நிறையவே இருக்கிறது.

& டைம் மெஷினில் கடந்தகாலத்திற்கு சென்றால், படிக்கவேண்டும் என்று நினைத்து எடுத்து வைத்த புத்தகங்களை அப்பப்படியே அப்போவே படிக்கவேண்டும். இப்போ எல்லாம் அந்தப் புத்தகங்கள் எங்கே போயின என்று தெரியவில்லை!

3. பயணத்துக்குத் தோதுப்படும் உணவு எது? (உள்ளூர் வெளியூர்னு தரம் பிரிக்காதீங்க)

# மிளாகாய்ப் பொடியில் புரட்டிய இட்லி, புளியோதரை, தயிர் சாதம்.

& சிலசமயங்களில் மியூசிக் அகடெமிக்கு காலையில் கச்சேரி கேட்கப் போகும்போது, நாள் முழுவதும் பல கச்சேரிகள் கேட்க திட்டம் போட்டிருந்த சமயத்தில், நான்கைந்து சப்பாத்திகள் செய்து எடுத்துக்கொண்டு, தொட்டுக்கொள்ள சிறிது மிளகாய்ப்பொடி அல்லது கொஞ்சம் சர்க்கரை எடுத்துக்கொண்டு சென்றுவிடுவேன். கச்சேரிக்கு இடையில் நேரம் கிடைக்கும்போது ஒரு சுருள் சப்பாத்தி கடிச்சு மென்றுவிடுவேன். பயணங்களின்போது தயிர் சாதம் ஊறுகாய் பெஸ்ட்.

கில்லர்ஜி:

மரணத்தை நமது விதி என்று நம்பி வாழ்ந்து வந்தோம்.

ஆனால் தற்போது கொரோனா என்ற தீநுண்மியால் மரணங்கள் வருகிறதே இதுவும் விதியா ?

# கொரோனாவில் மரண விகிதம் மிகச் சொற்பம். மேலிடத்து வார்னிங் என்று கொள்ளலாமோ ?

இதுவரை எந்த ஜோதிடரும் இப்படியொரு மரணம் வருவதாக சொல்லவே இல்லையே ஏன் ?

# ஜாதகம் பார்த்து வரும்பொருள் உரைப்பவர் ஜோசியர். கிரகத்துக்கே கிரகணம் பிடித்தால், அதன் ஜாதகமும் கிடைக்காத போது அவர் என்ன செய்ய முடியும் ?

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# கதை போல ஒரு நிஜம் ஸ்ரீராம்

முன்னர் சின்னவன் பிறந்த சமயம் நள்ளிரவு நேரத்தில் ஆட்டோவுக்கு அலைந்தபோது உதவியாய் இருந்த சில நல்லவர்கள் பற்றி எழுதி இருந்தேன். அப்போதே பெரியவன் விஷயத்தில் நடந்த ஆட்டோ அனுபவம் ஒன்றை எழுதுவதாய்ச் சொல்லி இருந்தேன். அது இந்த வியாழனுக்கு கைகொடுக்கிறது!

நான் உட்பட எல்லா சமயங்களிலும் எல்லோரும் நல்லவராய் இருந்து விடுவதில்லை. சமயங்களில் உள்ளுக்குள்ளிருக்கும் பிசாசு ஆட்டி வைத்து விடும். அதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் எனக்கு பெரியவன் சின்னக் குழந்தையாய் இருக்கும்போது வாய்த்தது.

அவன் பிறந்த நான்கே மாதங்களில் அவனுக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டு நீர்ச்சத்துக் குறைந்து ஆபத்தான கட்டத்துக்குப் போக, அது தெரியாமல் அவன் தூளியில் தூங்குவதாய் நினைத்துக் கொண்டிருந்த நேரம். எதேச்சையாய் வீட்டுக்கு வந்த சகோதரி அவன் கையைக் கிள்ளிப் பார்த்து தோலின் தன்மையை ஆராய்ந்து சொல்ல, உடனே அவனை சென்னையின் அப்போதைய பெரிய மருத்துவமனை ஒன்றுக்கு அழைத்துச் சென்றோம். உடனே உள்ளே சேர்த்து சிகிச்சை அளிக்கத் தொடங்கினார்கள்.

குழந்தையுடன் ஒருவர் மட்டுமே இருக்க முடியும் என்கிற நிலையில் நாங்கள் அப்போது பட்ட அவஸ்தை தனி. அப்பா அம்மா சென்னையில் என்னுடன் இருந்தாலும், தங்கைக்கும் அதே சமயம் குழந்தை பிறந்திருந்ததால் வேறு சில சிரமங்களும் ஏற்பட்டன. நானும் பாஸும் மட்டுமே சமாளித்த நேரங்கள் அது.

மருத்துவர் விசிட் வரும் நேரங்களில் ஒருவர் உலாவப்போவது போல சென்று மறைந்து கொள்வது, பாத்ரூமில் ஒளிந்து கொள்வது, அங்கேயே மற்ற படுக்கையில் ஆளில்லா படுக்கைக்கு அருகில் நின்று சமாளிப்பது என்று போக்குக் காட்டி சமாளிப்போம். அவன் கைக்குழந்தை என்பதால் அம்மா அருகே இருப்பது அவசியம். அவளால் தனியாய்ச் சமாளிக்க முடியாது என்பதால் நான் அங்கே இருக்க வேண்டியதும் அவசியம்.

இந்நேரத்தில் நடந்த சில மனவேதனை சம்பவங்களை சொல்லாமல் ஸ்கிப் செய்து விடுகிறேன். ஏற்கெனவே சொல்லி இருப்பது போல நானாக இருந்தாலும் அப்படிதான் செய்திருப்பேனோ என்னவோ! இதில் நான்கு மாதங்களிலேயே அவள் அம்மா வீட்டிலிருந்து மனைவியை குழந்தையுடன் அழைத்துக்கொண்டது நான் செய்த தவறுகளில் ஒன்று.

இரண்டு நாட்கள் அங்கிருந்தபின், சரியாகி விட்டது என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பினார்கள். சில முக்கியமான முன் எச்சரிக்கைகளை சொல்லாமல் போனார்கள். அதாவது அவனுக்கு கொஞ்ச நாட்களுக்காவது சர்க்கரை சேர்க்கக்கூடாது.

எனவே சில நாட்களிலேயே மறுபடியும் குழந்தைக்கு அதே பிரச்னை தலைதூக்கியது. முக்கிய காரணம் எங்கள் அனுபவமின்மையும், அஜாக்கிரதையும் கூட என்று சொல்லலாம். மறுபடியும் மருத்துவமனை செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்.

இப்போது அந்தப் புகழ்பெற்ற மருத்துவமனைக்குச் செல்ல ஏனோ விருப்பமில்லை. நுங்கம்பாக்கத்தில் இருந்த புகழ்பெற்ற அந்தக் குழந்தைகள் மருத்துவமனைக்குச் செல்ல முடிவெடுத்தோம். நாங்கள் இருந்த இடத்திலிருந்து அது சற்றே தூரம். மணியோ இரவு பதினொன்று. நமக்கு வாய்க்கும் நேரம் எல்லாம் இப்படிதான் அமைகின்றன.

மரத்தடியில் நின்று பணத்தை எண்ணிக்கொண்டிருந்த ஆட்டோக்காரர் நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே கிளம்பிச் சென்று விட்டார். சற்றுத் தள்ளி நீண்டிருந்த இன்னொரு ஆட்டோக்காரர் நான் அருகில் வருவதைப் பார்த்ததுமே ஆட்டோவைக் கிளப்பிக்கொண்டு சென்று விட்டார். அந்த நேரத்தில் சாலையில் ஆட்டோக்கள் கண்ணில் படுவதே அபூர்வமாய் இருந்தது. வந்த ஒன்றிரண்டு ஆட்டோக்களும் நிற்காமல் சென்றன. /

அப்போது அங்கு டீக்கடையை மூடிக்கொண்டிருந்த கடைக்காரர் எதிரிலிருந்த தெருவைக் காட்டி அங்கு சில ஆட்டோக்காரர்கள் வீடு இருக்கிறது என்றும் அங்கு சென்றும் பார்க்கச் சொன்னார்.

நான் சென்ற முதல் தெருவிலேயே வாசல் இரும்புக்கதவை மூடி சிலர் சீட்டாடிக் கொண்டிருந்தனர். அருகில் மூன்று ஆட்டோக்கள் நின்றிருந்தன. எனக்கு நம்பிக்கை பிறந்தது.

அவர்களை அணுகினேன். அழைத்தால் திரும்பிப் பார்க்கவே இல்லை ஒருவரும். சரி, திரும்பிப் பார்க்கவில்லை என்றாலும் விஷயத்தைச் சொல்லிக் கூப்பிடுவோம் என்று சொல்லி முயற்சித்தேன்.

ஆடிக்கொண்டிருந்த ஒருவர் அவர்களிடையேயே சொன்னார் ″அதுக்குதான் லைட்டை அணைச்சிட்டுப் படுங்கடான்னு அப்போவே பிடிச்சு சொல்லிக்கிட்டிருக்கேன்...″ லைட்டை அணைத்தார்கள். படுத்து விட்டார்கள். நான் ஒருவன் நின்றிருப்பதாகவோ, பேசியத்தையோ துளிக்கூட லட்சியம் செய்யவில்லை. நான் சந்தித்த மிகப்பெரிய அதிர்ச்சி அது. நான் என்னவோ ஆட்டோவை அழைத்தால் வந்து விடுவார்கள் என்றே நினைத்திருந்தேன். வீட்டில் வேறு பாஸ் குழந்தையை அழைத்துச் செல்லத் தயாராய்க் காத்திருந்தார்.

பிரமை பிடித்தது போல நின்றிருந்த என்னைத் தாண்டிச் சென்ற அதே டீக்கடைக்காரர் என்னை அழைத்து கொண்டு அருகில் இருந்த இன்னொரு தெருவுக்கு அழைத்துப் போய் அங்கிருந்த ஆட்டோவைக்காட்டி கதவைத் தட்டிப் பார்க்கச் சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

முற்றிலும் நம்பிக்கை இழந்த நிலையில், இங்கு வேறு கதவைத்தட்டி திட்டு வாங்க வேண்டுமா என்று தோன்றியது. மற்றவர்களாவது சாலையில் இருந்தார்கள், இவர்கள் விழித்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். இந்த வீடோ விளக்கணைத்து, கதவு தாழிடப்பட்டிருந்தது. தயக்கம்தான். என்ன செய்ய... மகன் முகம் மனதில் நிழலாட கதவை நெருங்கினேன்.

மிகச்சிறிய வீடு. ஒரு ஹாலும், ஒரு கிச்சனும் பாத்ரூம் லெட்ரினும் மட்டுமே இருக்கும் வகை வீடு அது என்று பார்க்கும்போதே தெரிந்தது. காம்பவுண்டு சுவர் எல்லாம் இல்லாமல் அணுக சுலபமாக இருந்தது.

கதவைத்தட்டினேன். சத்தமே இல்லை.

மீண்டும் தயக்கத்துடன் சற்று பலமாகத் தட்டினேன். பதில் இல்லை. தயக்கம் அதிகமாக இன்னும் பலமாகத்தட்டி ″ஸார்...″ என்று குரல் கொடுத்தேன்.

விளக்கு போடப்படுவது தெரிந்தது. மெதுவாக, மிக மெதுவாக கதவு திறக்கப்பட்டது.

[கதை போல எழுதி வந்தாலும், இது கதையல்ல நிஜம்! 'முழுவதும் ஒரே மூச்சில் எழுதி விட்டால் மற்ற பகுதிகளுக்கு இடமில்லாது போகும்' என்று சாக்கு சொல்லி மிச்சத்தை வழக்கம்போல அடுத்த வாரம் தொடர்கிறேன்!]




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# பலசரக்கு :: ஸ்ரீராம்

**பொக்கிஷம் பகுதியில் கலைமகள் பத்திரிகையிலிருந்து சில பகுதிகள்.. நெடுங்கதை, குறுநாவல் என்று அப்போது போட்டுக்கொண்டிருந்தார்கள். அதை எழுதிய கதாசிரியர் பற்றிய அறிமுகங்களை இதழாசிரியர் கொடுப்பது வழக்கமாய் இருந்திருக்கிறது. அவற்றில் சில...**

**கிருத்திகா... இப்படி ஒரு கதாசிரியர் நான் கேள்விப்பட்டதில்லை. திரும்பவும் வாழ நேர்ந்தால் என்கிற கதை.**

ஆசிரியை ஸ்ரீமதி கிருத்திகா டெல்லியில் ஓர் உயர்தர அதிகாரியின் மனைவி. அழகாக எழுதும் ஆற்றல் உள்ளவர். இரண்டு நாவல்களும் பல கட்டுரைகளும் சில சிறு கதைகளும் எழுதியிருக்கிறார். ஆங்கிலமும் தமிழும் வல்ல இவருடைய சிறு கதையில் மனத்தத்துவத்தின் நுட்பம் பலபடியாகப் புலனாகிறது. இந்த நெடுங் கதையின் மூலப் பாத்திரத்தின் மனத்தைத் தெளிவாக ஓவியம் செய்து காட்டியிருக்கிறார்.

**பரிசு பத்து நூறு என்கிற கதை..**

**கதையும் ஆசிரியையும்**

இதை எழுதிய ஆசிரியை ஸ்ரீமதி எஸ். ரங்கநாயகி அவர்கள் பல சிறு கதைகளை எழுதிப் பழக்கமுள்ளவர். இந்தக் கதை மனித மனோபாவங்களின் மோதலை நன்றாகச் சித்திரிக்கிறது. அவரவர்கள் தம் தம் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள முந்துகிறார்கள். ஆனால் எல்லோருடைய ஆசைகளையும் நிராசையாக்குகிறான் வாசு. என்றாலும் அவன் எல்லோருக்குமே நன்மை செய்கிறான். அந்தத் தியாகியையும் அவனைப் பெற்றெடுத்த தாயாகிய ஆனந்தத்தையும் நாம் மறக்க முடியாது. இருவரும் அழகான, மனத்தினின்றும் அழிக்க முடியாத பாத்திரங்கள்.

## அருளின் ஒளி என்கிற கதை

### ஆசிரியரைப்பற்றி

இந்த அழகிய கதையை எழுதிய ஸ்ரீமதி லட்சுமி சுப்பிரமணியம் கலைமகள்
வாசகர்களுக்குப் புதியவர் அல்ல. 'துடிப்பின் எல்லை' என்ற தொடர்கதைக்
காக ஸ்ரீ நாராயணசாமி ஐயர் பரிசைப் பெற்றவர் அவர். மன இயல்பைத்
தெள்ளத் தெளிக்கும் சிறுசிறு வாக்கியங்களால் கதைக்குச் சுவையூட்டுபவர்
அவர். இந்தக் கதை ஓர் அற்புதமான படைப்பு என்பதை, படித்து முடித்த
வர்கள் உணர்வார்கள்.

Edited, Published and owned by N. Ramaratnam, M.A.,B.L., and Printed at the M.L.J. Press Private Ltd.,
55/56, Mundakakkanni Amman Koil Street, Mylapore, Madras-4.
Editor : N. Ramaratnam, M.A., B.L.
Managing Editor : K. V. Jagannathan.

## மங்கை பி ஏ என்கிற கதை... "குமாரி" ஆர். சூடாமணி!


குமாரி சூடாமணி கலைமகள் வாசகர்களுக்குப் புதியவர் அல்ல. 'மனத்
துக்கு இனியவ'ளைத் தந்து ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றவர். பாத்திரத்தை
விள்ளாமல் விரியாமல் முழுமையாகப் படைக்கும் ஆற்றலை அந்த நாவலில்
பார்த்தோம். இந்த நெடுங்கதையிலும் பார்க்கிறோம். மங்கையின் ஓவியம் ஓர்
அபூர்வப் படைப்பு. "டீச்சர், நீங்கள் என் தெய்வம்!" என்று அவள் சொல்லும்
போது நம்முடைய இதயமும் அவளுடன் சேர்ந்துகொண்டு உறவாடுகிறது.

**என்ன கதை என்று குறிப்பிலேயே இருக்கிறது!**

## கதாசிரியர் ஜெகசிற்பியன்

எப்போதும் கண்முன் நிற்கும் அற்புத மனிதர்களைக் கொண்டு, மனத்தில் பதியும் பலநிறக் காட்சிகளை இந்திரஜாலமாகக் காட்டி, வேகமாக ஓடும் கதையைப் புனைவதில் ஜெகசிற்பியன் வல்லவர். மாந்தரின் மன விந்தைகளை நன்றாக அலசிக் காண்பித்து, வாசகர்களைக் கடைசி வரையில் பிரமிக்கச் செய்வார். இவர் எழுதத் தொடங்கும்போதே உயிருள்ள சொற்கள் அடுக்காக நிற்கும். இவருடைய திறமையை இதற்கு முன்பே, கலைமகள் அன்பர்கள் பல கதைகளிலும் கண்டிருக்கிறார்கள். ஆனால், என்றும் புதுமையான கற்பனை வளம் இவரிடம் செறிந்திருப்பதற்கு, 'ஒரு நாளும் முப்பது வருடங்களும்' சான்று கூறுகிறது. ஒரு நாளைய நிகழ்ச்சி, முப்பது வருடங்களுக்கு நீடித்து, மீண்டும் ஒரு நாளைய நிகழ்ச்சியில் முடிவு பெறுகிறது!

**அந்தக் கால பாணியில் 'இப்படி' எழுதுவது புதுமையாய் இருந்திருக்கிறது என்று குறிப்பில் தெரிகிறது!**




**ஜீவி ஸாரின் நண்பர் எழுதிய கதையும் இத்தொகுப்பில் இருக்கிறது என்பதைச் சொல்ல...!**



# வெளிச்சம் வரும்

வையவன்

...ரென்று காலிங் பெல் அடிக்கும் ஓசை கேட்கும் போதெல்லாம் ஜமுனாவின் இதயம் படபடவென்று ...த்துக்கொள்ளத் தொடங்கிற்று. பளிங்கும் பேழை ...ன்ற கன்னங்களில் ஜிவ்வென்று செம்மை ஏறிற்று. ...ன் ஹாலில் மாட்டியிருந்த 'குக்கூ கிளாக்'கைக் கவனித் ...ள். அந்த கடிகாரம் ஒரு நிமிஷம் தாமதமாகப் போவது ...னுக்கு மன்னிக்க முடியாத குற்றமாகப்பட்டது.

...ம்மா மாடியில் பூஜையறையில் இருக்கிறாள் என்று ...ளின் வெண்கலம் போன்ற குரலில் மணி மணியாக ...யாசகம் வாசிப்பது தெரிந்தது.

## ரசிப்பதற்கு ஒரு பழைய படம்!



## ச்சும்மா… பேஸ்புக்கில் ஒரு கலாய் பதிவிட்டபோது!

**Sriram Balasubramaniam**
October 10, 2015 at 2:11 PM ·

ஹி... ஹி... ஹி.. இப்போ அம்மன் கோவில் கிழக்காலே படம்.

ஊமையாயிருக்கும் தனது காதல் மனைவிக்கு பேச்சு வந்தால்தான் முதலிரவு என்று (பெண் வீட்டு செலவிலேயே ட்ரீட்மெண்ட் எடுக்க முடிவு செய்து) அவன் வெளியே படுக்க,

ராதா அவளை உடனே ஆற்றோரமாக மலைச்சாரலில் இருப்பாரே ஒரு சாமியார் டாக்டர் - மூன்றாம் பிறை போன்ற படங்களில் கூடப் பாரத்திருப்பீர்கள் - அவரிடம் அழைத்துச் செல்கிறார்.

அவர் மௌன ராக ரேவதியப்பா!

அவர் தோலில் கட்டி இழுக்கும் சப்பரம், மண்சோறு போன்ற ட்ரீட்மெண்ட்களைச் சொல்லுமுன் கேட்கிறார்...

" என் கைல என்னம்மா இருக்கு.....?"

அவர் கையில் இருப்பது என்ன என்றே கண் தெரியாதவராயிருக்கிறாரே என்று எழுந்து வராமல் ராதா அவரிடமே தொடர் சிகிச்சைக்கு சம்மதிக்கிறார் பாருங்க....

அதான்... அதாங்க....

நம்பிக்கைதாங்க பாதி மருந்து! 😛



## அதற்கு வந்த இரண்டு கமெண்ட்ஸ்...

**Ganesh Bala** Aval oomai endru therinthu thane antha moodevi love pannuthu? Appuram Ethukku pechu vanthal than muthal iravu engira kenathanama condition? Ore Confusion.

Like · Reply · See Translation · 4y · 2

**Sriram Balasubramaniam** அந்தக் கர்மத்துக்குப் பேரு தியாகமாம்!

Like · Reply · 4y · 1

**Srinivasagopalan Madhavan** Oh! That's Mr. Chandramouli .

Like · Reply · See Translation · 4y · 1

**Sriram Balasubramaniam** அடேடே... மௌனராக மிஸ்டர் சந்திரமௌலி என்றே நானும் சொல்லியிருக்கலாமே...!



[மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...]

ரஞ்சனி நாராயணன் அக்காவுடன் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு அனுபவத்தைச் சொன்னார். அதை எழுதி அனுப்புங்களேன் என்று கேட்டதும் எழுதி அனுப்பி இருக்கிறார்.



# கதை நிஜமானது! - ரஞ்சனி நாராயணன்

பொதுவாகவே ஓர் கதை என்பது பாதி கற்பனை மீதி நிஜம் என்று இருக்கும். எழுதுபவர்கள் தங்கள் அனுபவங்களை சற்று கற்பனை கலந்து எழுதுவார்கள். சிலசமயம் கதை என்று எழுத சில வருடங்கள் கழித்து அது நிஜமாகவும் ஆகலாம். The Negotiator என்று ஓர் கதை Frederick Forsyth எழுதியது.

ராஜீவ் காந்தி கொலை நடந்த பிறகு பலர் அவரை இந்தக் கொலையில் சம்மந்தப்படுத்தி பேசினார்கள். காரணம் அவரது கதையில் வரும் கொலைகாரன் தனது இடுப்புப் பட்டையில் குண்டுகளை கட்டிக் கொண்டு வந்து கொலை செய்வான். ராஜீவின் கொலையாளியும் அதே உத்தியை கடைபிடித்தாள்.

இப்போது இதை நான் சொல்லக் காரணம் 20 வருடங்களுக்கு முன் நான் எழுதிய கதை சமீபத்தில் நிஜமாயிற்று. ஸ்டாப்! ஸ்டாப்!

யாரை உங்கள் கதையில் கொன்றீர்கள்? நிஜத்தில் யார் யாரைக் கொன்றார்கள்? என்றெல்லாம் உங்கள் கற்பனைக் கேள்விக் கணைகள் வந்து என்மேல் பாயும் முன் சஸ்பென்ஸை உடைத்து விடுகிறேன். பத்து நாட்களுக்கு முன் என் மருமகள் ராகி முத்தை செய்திருந்தாள். அதை சாப்பிடும் போதுதான் என் மூளையில் ஒரு மின்னல் வெட்டு. ஆஹா! 20 வருடங்களுக்கு முன்னால் இந்த ராகி முத்தையை வைத்து நான் ஒரு கதை – எனது முதல் கதை – எழுதினேன். அதில் என் பிள்ளை

கர்நாடகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு நான் அவர்கள் வீட்டிற்குப் போகும் போது என் மருமகள் எனக்கு ராகி முத்தை செய்து போட்டு அதை சாப்பிடத் தெரியாமல் நானும் என் கணவரும் விழிப்பது போல எழுதியிருந்தேன். அது நினைவிற்கு வந்தவுடன் என் மருமகளைக் கூப்பிட்டு என் கதையை நீ இன்று நிஜமாக்கி விட்டாய் என்று சொன்னேன். ஆனால் இந்த தடவை நன்றாகச் சாப்பிட்டோம்! அது ஒன்று தான் கதையிலிருந்து மாறுபட்டது.

இதில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயம். இந்தக் கதையை நான் எழுதிய போது என் பிள்ளை ரொம்பவும் சின்னவன். பிறகு அவனுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆனவுடன் என் அம்மா கேட்டாள்: 'என்னடி பெண்ணின் பெயர் வேறு என்னவோ சொல்லுகிறாயே? ஷீதல் எங்கே?' என்று. என் கதையில் கதையின் நாயகி ஷீதல்! முதல் கதை முதல் நாயகி எப்படி மறக்க முடியும்?

ஆங்கிலக் கட்டுரையாளர் JB Priestly அன்று மிகவும் உற்சாகத்துடன் டிராம் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவரது முதல் கட்டுரை லண்டனின் பிரபல இதழ் ஒன்றில் அன்று பிரசுரம் ஆகியிருந்தது. அதுமட்டுமல்ல அவரது உற்சாகத்திற்குக் காரணம். அங்கு அவருடன் கூட பயணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண்மணியின் கையில் அவரது கட்டுரை வந்த அதே இதழ்! 'அந்தப் பெண்ணுக்குத் தெரியுமா அந்த இதழில் எழுதிய பல அறிஞர்களில் ஒருவர் தனக்கு மிகச் சமீபத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்று?' என்று அவர் நினைத்துக் கொண்டாராம்!

எனது முதல் கதை வெளிவந்த போது நான் கூட இப்படித்தான் நினைத்துக் கொண்டேன்: உலகமே மங்கையர் மலர் புத்தகத்தை வாங்கி என் கதையைத் தான் படித்துக் கொண்டிருக்கிறது என்று!

ஒரு கதை வெளிவந்துவிட்டால் எல்லா எழுத்தாளர்களுமே தொடர்ந்து எழுதத் தொடங்கி விடுவார்கள். நானும் அப்படித்தான். ஆனால் Franz Kafka என்கிற ஐரோப்பிய இலக்கிய கர்த்தா அதிகம் எழுதவில்லை. மூன்று நாவல்கள், சில சிறுகதைகள் சில கடிதங்கள் அவ்வளவுதான் அவரது படைப்புகள். தனது இறப்பிற்குப் பின் தனது படைப்புகளும் மறைந்துவிட வேண்டும் என்று நினைத்து தனது நண்பர் Max Brod என்பவரிடம் தனது படைப்புகளைத் தீக்கிரையாக்கும்படி

கேட்டுக் கொண்டாராம். ஆனால் அவரது நனபர் அப்படிச் செய்யவில்லை.

சமீபத்தில் டெக்கன் ஹெறால்ட் செய்தித்தாளில் 'Right in the middle' பகுதியில் திரு சி. வி. சுகுமாரன் என்பவர் தனது முதல் படைப்பைப் பற்றி எழுதும் போது மேற்கண்ட இரு கட்டுரையாளர்களை குறிப்பிட்டு எழுதியிருந்தார். சுவாரஸ்யமாக இருந்ததால் நீங்களும் படிக்க அதை எழுதினேன்.

இப்படியாக எனது முதல் கதை வெளிவந்த 20வது வருடத்தை ராகி முத்தை செய்து சாப்பிட்டுக் கொண்டாடிவிட்டேன்.




மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி

அங்கிதா அன்று அங்கே முன்பாகவே வந்து சேர்ந்துவிட்டாள். வித்யாவுக்கு உதவியாக அரிசிமாவு உப்புமா தயாரிக்க சமையலறைக்கு சென்றுவிட்டாள். அறிவுஜீவி பொழுதுபோகாமல் டீ வி யில் NHK World TV பார்த்துக்கொண்டிருந்தார். Sumo பற்றி பார்த்து, அவ்வப்போது சிரித்துக்கொண்டிருந்தார்.

அப்போது உள்ளே வந்த அருண், " என்ன அங்கிள் ஏதோ பேர் தெரியாத சானல் எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் !" என்று கேட்டான்.

அ ஜீ : " சும்மா எந்த சானலை டியூன் செய்தாலும் 'கொரோனா கொரோனா , கோவிட் என்றெல்லாம் பார்த்து போர் அடிக்குது. அதனால்தான் வித்தியாசமா ஏதாவது பார்த்து கொஞ்சம் டைவர்சன் ..... "

அருண் : " அங்கிள் - அங்கே பாருங்க - அந்த ஒல்லிப் பையன் குண்டுப் பையனைத் தோற்கடிச்சுட்டான்!"

அ ஜீ : " ஆமாம் பாரேன்! சுறுசுறுப்பா குண்டனுக்குப் போக்குக் காட்டி அவனை என்ன லாகவமா கீழே தள்ளிட்டான்! "

அருண் : " அந்த ஒல்லிப் பையன் ஒரு வினாடி தாமதித்திருந்தாலும் - குண்டு கிட்ட தோற்றிருப்பான்."

அ ஜீ : " அது சரிதான். நாம் சர்வ சாதாரணமாக ஒரு வினாடி என்று சொல்கிறோம். ஆனால் அந்த ஒரு வினாடி நேரத்தில் உலகில் என்னவெல்லாம் நடக்குது தெரியுமா?"

வித்யா மற்றும் அங்கிதா சுடச்சுட அரிசிமாவு உப்புமா நான்கு தட்டுக்களில் போட்டு எடுத்துவந்தனர்.

அருண் : " ஆஹா ! அ மா - உ மா ! எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அதிலும் வித்யா ஆண்ட்டி எப்படியோ அதை இவ்வளவு டேஸ்டா செய்யறாங்க. ஒரே உப்புமாவில் காரம், புளிப்பு, மொறுமொறுப்பு, சுவை, பெருங்காய தாளிப்பு வாசனை எல்லாம் சேர்ந்து அதை சாப்பிடும்போது சொர்க்கலோகமே சுலபமா நம்மிடம் வந்து சேர்ந்துவிடுகிறதே!

அங்கிதா : " ஆண்ட்டி அதை எப்படி செய்யறாங்க என்று இன்று நேரிலேயே பார்த்துத் தெரிந்துகொண்டுவிட்டேன். எங்கள் வீட்டிலும் இதைபோல செய்து எல்லோரையும் அசத்தப்போகிறேன்."

வித்யா டீ வி சானலைப் பார்த்து " ஐயே - என்ன இந்த ஆளு என்னென்னவோ கடல் ஜந்துக்களை தட்டுல போட்டு திங்கறார்! அதை முதலில் ஆ்ஃப் செய்ங்க! "

அ ஜீ : " நமக்கு டிபன் டயம். அதுபோல அங்கே ஜப்பானில் பயணிப்பவருக்கும் டிபன் டயம்! அது அவங்க டிபன்! " என்று சொல்லியவாறு டி வி யை ஆ்ஃப் செய்தார்.

வித்யா : " சரி நாங்க வரும்போது ஒரு வினாடி நேரம் பத்தி ஏதோ சொல்லிக்கிட்டு இருந்தீங்களே, அது என்ன?"

நால்வரும் அரிசி மாவு உப்புமாவை ஸ்பூனால் எடுத்து சாப்பிட்டபடியே அன்றைய அரட்டையைத் துவங்கினார்கள்.

அ ஜீ : " நான் என்ன சொல்லவந்தேன் என்றால் ...."

வித்யா : " ஒரு செகண்ட் இருங்க நான் போய் ஸ்டவ்வை சரியா ஆ்ஃப் செய்துட்டேனா என்று பார்த்துவிட்டு வருகிறேன்."

அ ஜீ : " ஒரு செகண்ட் நேரம், நீ சொல்ல ஆரம்பித்து முதல் மூன்று வார்த்தைகள் சொல்லிமுடிக்கும்போதே முடிந்துவிட்டது."

வித்யா : " அட ராமா ! ஒரு நிமிஷம் இருங்க - இதோ வர்றேன்"

சமையலறைக்குப் போய் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துத் திரும்ப வந்தாள் வித்யா.

வித்யா : " சரி. இப்போ சொல்லுங்க உங்கள் ஒரு வினாடி மகத்துவங்களை"

அ ஜீ : " ஒரு வினாடி நேரத்தில், ஒரு அற்ப ஜந்து அறுநூறு விஷயங்கள் செய்கிறது. அத என்ன தெரியுமா? "

அங்கிதா : " இங்கே ஒரு ஆளு ஒரே வினாடியில் அறுபது கிராம் அரிசிமா உப்புமா கபளீகரம் செய்வது தெரியும். ஆனால் அறுநூறு? எந்த ஜந்து என்ன விஷயம்?"

அ ஜீ : " கொசு. அது தன்னுடைய இறக்கைகளை ஒரு வினாடிக்கு அறுநூறு முறை அடித்துக்கொண்டு அந்த நேரத்தில் நாற்பத்தைந்து சென்டிமீட்டர் தூரம் பறக்குமாம்!"

வித்யா : " உலகில் வேகமாக செல்லக்கூடிய உயிரினம் எது? ஒரு வினாடியில் எவ்வளவு தூரம் செல்லும்? "

அ ஜீ : " பெருக்ரஹ்ன் (Peregrine) என்ற வல்லூறு இனத்தைச் சேர்ந்த பறவை. - உலகில் வேகமாகப் பாயும் பறவை. அதன் வேகம் மணிக்கு இருநூற்று நாற்பது மைல்கள். அதாவது ஒரு வினாடியில் அது செல்லும் தூரம் நூற்று ஏழு மீட்டர்கள்!



107 metres / second



0.0013 metres /second

அங்கிதா : " உலகிலேயே மிக மெதுவாக நகர்கின்ற உயிரினம் எது? ஒரு வினாடிக்கு அது எவ்வளவு தூரம் செல்லும்?"

அ ஜீ : நமக்குத் தெரிந்து நம் தோட்டத்து நத்தைதான் மெதுவாக நகரும் என்று நினைக்கிறோம். ஆனால், நத்தையின் வேகத்தில் பத்தில் ஒரு பங்கு வேகத்தில் நகர்கின்ற விலங்கினம் ஒன்று உண்டு! Sloth என்ற பெயர் கொண்ட சோம்பேறி விலங்கு. மத்திய மற்றும் தென் அமெரிக்கக் காடுகளில் காணப்படும். இதன் வேகம் ஒரு நொடிக்கு ஒண்ணே கால் மில்லிமீட்டர்!

அங்கிதா : “அவ்வளவு slow என்றால் நத்தையைவிட சிறியதா?”

அ ஜீ : “ ஊஹூம் - அது நத்தையை விட மிகப் பெரியது. சுமார் இரண்டடி நீளம்(60 cm), ஐந்து கிலோ எடை கொண்ட பிராணி. நான்கு கால்களில் ஒவ்வொன்றிலும் மூன்று விரல் மற்றும் நீண்ட நகங்கள் கொண்டது!



அருண் : “சரி இப்போ நான் மெதுவாக வீட்டுக்குப் போய்விட்டு .... அப்புறம் நா ளை ..... க் கு ......வ... ரு.. கி றேன் .......” (தொடரும்)



மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

**வாழ்விலும் தாழ்விலும் விலகிடாத நேசம்** வாலிபம் தென்றலாய் என்றும் இங்கு வீசும்

முதலில் ஒரு நேயர் விருப்பப் பாடல். பானு அக்கா சிட்சோர் படத்திலிருந்து ஏதாவது ஒரு பாடல் பகிர விருப்பம் சொல்லி இருந்தார்கள்.

முதலில் எல்லாம் அவ்வப்போது ஹிந்திப் பாடல்களும், தெலுங்கு மற்றும் கன்னடப்பாடல்களும் பகிர்ந்து கொண்டிருந்திருக்கிறேன். அது விவேக்கிடம் நகைச்சுவை நடிகர் சுப்பிரமணி (செல் முருகனோ) சொல்வது போல "போதிய வரவேற்பைப் பெறவில்லை!"

எனவே தவிர்த்தே வந்திருந்தேன். இப்போது பானு அக்கா விருப்பத்துக்காக இந்தப் பாடல்.

1976 இல் வெளியான சிட்சோர் பெரிய வெற்றி பெற்ற படம். ரவீந்திர ஜெயின் இசையில் கே ஜே யேசுதாஸ் குரலில் பாடல்கள் இப்போதும் வெகு பிரபலம். யேசுதாஸ் இந்தப் படத்துக்காக தேசிய விருது வாங்கினார். பாடல்களை இசை அமைப்பாளர் ரவீந்திர ஜெயின் அவர்களே எழுதி இருக்கிறார். இவர் கண்பார்வை இல்லாதவர் என்று நினைவு. இவர் இசை அமைத்த படங்களின் எல்லாப் பாடல்களுமே இனிமையானவை.

இன்றைய **நேயர் விருப்பப் பாடல்** எல்லோருமே கேட்டிருக்கக் கூடிய பாடல்தான். யேசுதாஸ் குரலில்...

* * * * *

இப்போது என் தெரிவு....

ஆர் சுந்தரராஜன் எழுதி இயக்கிய குங்குமச்சிமிழ் திரைப்படம் 1985 இல் வெளிவந்தது. வாலியின் பாடல்களுக்கு இசை இளையராஜா. ஒரே ஒரு பாடல் மட்டும் கங்கை அமரன்.




மோகன், இளவரசி, ரேவதி, சந்திரசேகர் நடித்தது.

இன்று பகிரப்போகும் பாடல் சந்தேகமில்லாமல் வாலி எழுதிய பாடல். நிலவு தூங்குமா என்றெல்லாம் அப்போது கேட்டுக் கொண்டிருந்தார்கள்.




எஸ் பி பாலசுப்ரமணியம் பாடிய மிக இனிமையான பாடல்களில் இதுவும் ஒன்று. சரணங்களில் அவர் குரல் அனாயசமாக எட்டும் துயரங்களும், குழைவும் (வாலிபம்... தென்றலாய்...) ரசிக்க வைக்கும்.

நிலவு தூங்கும் நேரம் நினைவு தூங்கிடாது

இரவு தூங்கினாலும் உறவு தூங்கிடாது

இது ஒரு தொடர்கதை தினம் தினம் வளர்பிறை

நிலவு தூங்கும் நேரம்

நான்கு கண்ணில் இன்று ஒரு காட்சியானதே

வானம் காற்று பூமி இவை சாட்சியானதே

நானுனைப் பார்த்தது பூர்வ ஜென்ம பந்தம்

நீண்ட நாள் நினைவிலே வாழுமிந்த சொந்தம்

நான் இனி நீ... நீ இனி நான்

வாழ்வோம் வா கண்ணே

கீதை போலக் காதல் மிகப் புனிதமானது

கோதை நெஞ்சில் ஆடும் இந்தச் சிலுவை போன்றது

வாழ்விலும் தாழ்விலும் விலகிடாத நேசம்

வாலிபம் தென்றலாய் என்றும் இங்கு வீசும்

ஏன் மயக்கம் ஏன் தயக்கம் கண்ணே வா இங்கே

நிலவு தூங்கும் நேரம் நினைவு தூங்கிடாது

இரவு தூங்கினாலும் உறவு தூங்கிடாது

இது ஒரு தொடர்கதை தினம் தினம் வளர்பிறை

நிலவு தூங்கும் நேரம் நினைவு தூங்கிடாது

- :LINK: -

மீணடும பொருளடககம பகுதி செலல ...

# எழுதும் முறைகளிலும் பொருள்களிலும் நிறைய மாற்றங்கள்! Kayjee

மைக்கூடு தொட்டு பேனா, இதை கட்டை பேன, ஸ்டீல் நிப் பேனா என்றும் சொல்வர், எழுதும் போது ஆகும் செலவை விட, சட்டையில் சிந்தி,சலவைக்காகும் செலவு அதிகம்.

மாத்திரைகள் வாங்கிக் கரைத்து இங்க் செய்வது கும்பகோணம் டிகிரி காப்பி மாதிரி ஒரு கலையாகவே இருந்தது.

மாத்திரைகளை கொண்டு வந்து, ஒரு சின்ன பீங்கான் தட்டில் (நாகூர் தர்கா முன் இருக்கும் கடைகளில் முன்னெல்லாம் விற்பார்கள் இரும்புப் plate மேல் வெள்ளைகளிமன் பூசி, சுட்டு செய்வார்கள். தேவகோட்டையில் தான் அதை மங்குப பாத்திரம் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன்) போட்டுப்பொடித்து ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் ( டீ க்ளாஸ் தான்) போட்டு, ஒரு மாத்திரைக்கு ஒரு அவுன்ஸ் சுமார் 28 மி லி, சுடு நீர் ஊற்ற வேண்டும். அவுன்ஸ் க்ளாஸ் எல்லோர் வீட்டிலும் இருக்கும்.

நம் இங்க் சூடாறியதும்,இங்க் பாட்டிலில் சேமிக்கும் முன் ஒரு துண்டுத துணி வழியே வடிகட்டுவது ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறை.

இங்க் செய்ய சனி,ஞாயிறு இரண்டு கிழமைகள் தான் உத்தமம். தேவையான பொருள்களை எடுத்து, தூசி நீக்கி பின் கழுவித் துடைத்த பின் இங்க் மேக்கிங் ஆரம்பித்தலை விட மிக முக்கியம், கண்ணாடிப் பாத்திரங்களை கையாள்வது. அதைவிட முக்கியம் எல்லாப் பொருள்களையும் கழுவித் துடைத்து அதனதன் இடத்தில் திரும்ப வைத்தல்.

அக்கா இந்த வேலை செய்ய வந்தால், பீங்கான் தட்டு, மாத்திரை, அதைத் பொடிக்க ஒரு பெரிய கூழாங்கல்

ஒரு பேப்பர் துண்டு

டீ க்ளாஸ்

ஒரு ஸ்பூன்

அவுன்ஸ் க்ளாஸ்

காலி மைப்புட்டி

இவற்றுடன் ஒரு உருண்டை சாணம்

ஒரு ஈரத்துண்டு.

நம் டாக்டர் வீட்டில் கம்பவுண்டர் கணேசன் மேஜையை விட அடைசலாகத் தெரியும்.

கடைசியாக சொல்லப்பட்ட 2 பொருள்கள் எதற்கு என்று ஒரு நாள் கேட்கவே கேட்டுவிட்டேன். அது...






(தொடரும்)

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

## + + இருண்ட வானில் ஒளிக்கீற்று

1) "பேக்கரி வேலையுடன், கார் மாற்றியமைக்கும் வேலையையும் செய்தேன். 2001-ல், டில்லியில் நடந்த தேசிய அளவிலான, வாகனத் தொழில்நுட்ப கருத்தரங்கில் பங்கேற்க, கேரளாவில் இருந்து டில்லி வரை, என் காரை நானே ஓட்டிச் சென்றேன்; எனக்கு முதல் பரிசு கிடைத்தது. இப்போது, 'டாடா நானோ' முதல், பி.எம்.டபிள்யூ., வரை எல்லா கார்களையும் மாற்றுத்திறனாளிகளுக்காக, 'ரீ-டிசைன்' செய்து கொடுக்கிறேன்; "

விபத்தில் இடுப்புக்கு கீழே இயங்காத நிலையிலும், கடுமையாக உழைத்து, தொழிலதிபராக உயர்ந்துள்ளது பற்றி முஸ்தபா.



2) பல ஆண்டுகளாக ரத்ததானம், ஏழை மாணவர்களுக்கு கல்வி கட்டணம், புற்று நோயாளி, விபத்தில் சிக்கியவர்கள், இயலாதவர்களுக்கு உதவி என பல 'மல்டி ஹெல்ப்' மனம்

கொண்டவராக திகழ்கிறார் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை கஞ்சநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலர் **துரை பிரிதிவிராஜ்.**




3) **கேரள முதல்வர், தமிழக சுகாதாரத்துறை அமைச்சர், மற்றும் இந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநர்** அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்...



4) நாடு முழுதும் உள்ள சமூக பின்தங்கியோரின் நிலைபற்றிய கதைகளைக் கேட்க நேர்ந்தால், மனது வலிக்கிறது. இருப்பினும் அவ்வப்போது இருண்ட வானில் ஒளிக்கீற்றுபோல் ஒன்றிரண்டு செய்திகள்.


தன் மற்றும் தன் இனத்தின் பரிதாப நிலையை மனதில் அழுத்திக்கொண்டு, துன்பங்களை உத்வேகத்துடன் கடந்து, தேர்வு வரை வந்து, அதில் சாதித்தும் விட்டார் **‘குடுகுடுப்பை’ சமூக மாணவி ஒருவர்.** அவரைப்போன்றோர் படிக்க நிகழ்வதே அபூர்வம். படிப்பைத் தொடர்ந்தது அபூர்வத்திலும் அபூர்வம். அதில் சாதித்தும் இருப்பது....

கடவுளே, சரி.. நீ இருக்கிறாய் ! (நன்றி ஏகாந்தன் ஸார்)



மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# ஆண்டாளின் அருள் ... ரமா ஸ்ரீநிவாசன்



விளையாட்டுப் போல நான் “எங்கள் பிளாக்”கில் அறிமுகமாகி எழுதத் தொடங்கி ஒரு வருடத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றேன். நாட்கள் ஓடவில்லை, பறக்கின்றன!

நான் போன வருடம் நவம்பரிலோ டிசம்பரிலோ (சரியாக நினைவில்லை) நம் பிளாக்கில் திருப்பாவை என்னும் காவியத்தை வடித்த ஆண்டாள் நாச்சியாரைப் பற்றி ஓர் கட்டுரை வெளியிட்டிருந்தேன்.

நேற்று ஆண்டாள் நாச்சியாரின் திருவாடிப் பூரமாகும், அதற்கேற்றாற்போல் இன்று என் வாழ்க்கையில் நாச்சியாரின் சம்மந்தமுள்ள ஓர் சுவையான அனுபவத்தைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக இக்கட்டுரையை வடிக்கின்றேன்.

பிறப்பில் நான் ஓர் சைவக் குலத்தைச் சேர்ந்தவள். என் பெற்றோர் அதீத சிவ பக்தர்கள். நானும் அவ்வகையே.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த நான் என் பெற்றோருக்கு ஒரே செல்லப் பெண்.
மற்ற இருவரும் என் அண்ணன்மார்கள்.
ஆகவே, செல்லமாகவே பெற்றோருடனும்
அண்ணன்களுடனும் வளர்ந்தவள்.

என் கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு எனக்கு மத்திய அரசின் கலால் துறையின் தேர்வில் வெற்றி பெற்று சென்னையிலேயே நந்தனத்திலுள்ள ஓர் அலுவலகத்தில் வேலை கிடைத்தது.

ஆங்கிலப் பள்ளியில் பயின்று சரளமாக ஆங்கிலம் பேசும் ஓர் சிறு வயது பெண்ணாய் போய் அங்கு வேலைக்குச் சேர்ந்தேன். கல கலவென பேசி சிரித்து பழகும் நான் யாவருடனும் சரி சமமாக கலந்துரையாடி இருக்கும் இடத்தையே ஆரவாரப் படுத்தும் இயல்புடையவள்.

திரு. ஸ்ரீனிவாசன் அதே அலுவலகத்தில் எனக்கும் முன் சேர்ந்து நல்ல அனுபவம் வாய்ந்தவர். அவர் ஓர் வைணவ குடும்பத்தை சேர்ந்தவர். கல்லூரி முடிந்தவுடனே வேலை கிடைத்து வந்து சேர்ந்து விட்டதால், என் உலக அனுபவம் பூஜியத்தில் நின்றது. அலுவலகத்திற்கு வேண்டிய நௌிவு சுளிவுகளையும் சாமர்த்தியமாக வேலை செய்வதையும் பொறுமையுடன் எனக்கு கற்று தந்தவரும் அவரே.

பழகப் பழக் இருவருக்குமே ஒருவர் மீது ஒருவர் ஈர்ப்பு ஏற்பட்டது. எங்களுக்கு நடுவில் பாலமாக இருந்தது இருவருக்கும் பிடித்த ஆங்கில மொழிதான். எண்ணிலடங்கா ஆங்கில எழுத்தாளர்களை பற்றியும் கவிஞர்களைப் பற்றியும் மணிக்கணக்காக அமர்ந்து உரையாடுவோம்.

இருவருமே நிறைய ஆங்கிலத்தில் எழுதுவோம்.

இவ்வாறாக நாட்கள் ஓடிக் கொண்டிருந்த போது, திரு. ஸ்ரீனிவாசனின் தாய் தந்தையருக்கு
எங்களின் நட்பு பற்றி தெரிய வந்தது. அவரது தந்தையார் வாழ்க்கை முடிவை தன் பிள்ளையிடமே விட்டு விட்டார்.

எங்கள் வீட்டிலும் ஒரு ஆட்சேபனையும் இல்லை.

ஆனால், திரு. ஸ்ரீனிவாசனின் அன்னை ஓர் பழமைவாதம் (orth odox) மிகுந்த வைணவ குடும்பத்திலிருந்து வந்தவர். எனவே, எங்களுக்கு முதல் முட்டுக் கட்டை அவர் ரூபத்தில் வந்தது. எங்கள் திருமணத்திற்கு ஆணித்தரமாக அழுத்தமாக மறுத்து விட்டார். அதுவுமில்லாமல் திரு ஸ்ரீனிவாசன் இல்லத்தில் என்றுமே மதுரையாட்சிதான். எனவே அவரது தந்தை என்ன செய்வதென்று புரியாமல் குழம்பினார். ஆனாலும் அவருக்கு என்னை மிகவும் பிடித்திருந்தது என் அதிர்ஷ்டம்.

நாங்கள் இருவருமே பெற்றோரை மீறி ஒரு முடிவு எடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். அவருடைய அன்னை சம்மதிக்கும் வரை காத்திருக்க முடிவு செய்தோம். மிகவும் குழப்பத்திலும் பயத்திலும் உழன்று கொண்டிருந்தோம்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள பெருமாள் கோவில் ஒன்றில் வருடா வருடம் திருவாடிப் பூரத்தன்று “ஆண்டாள் திருக்கல்யாணம்” வெகு விமரிசையாக நடைபெறும். ஒவ்வொரு வருடமும் நானும் ஸ்ரீனிவாசனும் அதைக் காண ஆஜாராகி விடுவோம்.

அப்படி பார்த்துக் கொண்டிருந்த ஒரு வருடம் என் அருகில் ஓர் வயது முதிர்ந்த அம்மையார் அமர்ந்திருந்தார். அவரை நான் போகும் போதும் வரும் போதும் வீதிகளில் பார்த்திருக்கின்றேனேயன்றி அவர் யார், எங்கிருக்கின்றார் என்பதெல்லாம் எனக்கு தெரியாது.

ஆண்டாளில் மாங்கல்ய தாரணத்தின் போது, திடீரென்று திரும்பி என்னைப் பார்த்த அவர் “நன்னா ஆண்டாளுண்ட வேண்டிக்கோம்மா. தினம் உன்னுடைய நாச்சியார் திருமொழியான வாரணம் ஆயிரம் படிக்கறேன். எம் மனசுக்கு பிடிச்சவரையே நான் கல்யாணம் பண்ணிக்கறத்துக்கு நீதான் அனுக்கிரகம் பண்ணனும்னு

வேண்டிக்கோம்மா. நிச்சயம் ஆண்டாள் நடத்தி வைப்பாள்" என்று அழுத்தமாகக் கூறினார். நான் பிரமித்துப் போய் நின்றேன்.

அதற்குள் விழாவும் முடிவுற்றது. யாவரும் கலைந்து போயினர். நானும்ஸ்ரீனிவாசனும் பிரசாதம் வாங்கிக் கொண்டு வீடு திரும்பும்போது நடந்ததை அவரிடம் நான் கூறினேன். குழம்பியிருந்த எங்களுக்கு தாயாரே ஓர் உபாயம் கூறியது போல் இருந்தது.

அன்று முதல் தினம் "வாரணம் ஆயிரம்" ஒரு நாள் கூடத் தவ றாமல் பக்தியுடன் படித்தேன். ஆண்டாள் திருக்கல்யாணமும் ஒவ்வொரு வருடமும் தரிசித்து வேண்டிக் கொண்டேன்.

நண்பர்களே, காத்திருந்தால் கல்லும் கரையும் என்பது பழ மொழியல்ல. நடை மொழி. நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஒன்றல் ல, இரண்டல்ல. ஏழு வருடங்கள் காத்திருந்தோம். தினப் பொ ழுதும் வாரணம் ஆயிரத்துடனே சென்றது.

தன் பிள்ளை வேறு எந்த பெண்ணையும் திருமணம் செய்து கொள்ள மாட்டான் என்று ஸ்ரீனிவாசனின் தாய் முற்றிலும் உ ணர்ந்து கொண்டு வேறு வழியில்லாமல் அரை மனதுடன் எங் கள் திருமணத்திற்கு 1991ஆம் வருட இறுதியில் சம்மதித்தார்.

1992ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் எங்கள் திருமண ம் சென்னையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

தேடிப் பிடித்து எந்த அம்மையார் என்னை ஆண்டாளிடம் வே ண்டிக்கொள்ள சொன்னார்களோ, அவர்களை இருவரும் நேரி ல் சென்று திருமண பத்திரிக்கை வைத்து எங்கள் திருமணத்தி ற்கு அழைத்தோம் என்று கூறவும் வேண்டுமோ?

வைணவ மத வழக்கப் படி எனக்கு ஆண்டாள் கொண்டை போட்டு, வைணவத் திலகமிட்டு மடிசார் உடுத்தி திரு ஸ்ரீனிவாசன் அவர்கள் என் கழுத்தில் திருமாங்கல்யம் அணிவித்தார். அந்த நிமிடம் முதல் நான் திருமதி ரமா ஸ்ரீனிவாசன் ஆனேன்.



நண்பர்களே, ஆண்டாளின் சக்தியும் தன்னை அண்டியவரை அணைத்து அரவணைக்கும் பண்பும் அதை அனுபவித்தவருக்கு மட்டுமே புரியும். அன்று முதல் இன்று வரை நான் தினமுமே “வாரணம் ஆயிரம்” சொல்லாமல் ஒருநாள் சென்றதில்லை.

அதே போல் ஒவ்வொரு மார்கழி மாதமும் விடியலில் எழுந்து நீராடி திருப்பாவை வாசித்த பின் பெருமாள் கோவிலுக்கு சென்று பெருமாள், தாயார் மற்றும் ஆண்டாளைச் சேவித்த பின்னர்தான் நாளையே தொடங்குவேன். என் இரு பெண் குழந்தைகளுக்கும் இந்த “வாரணம் ஆயிரம்” ஸ்லோகத்தைக் கற்று கொடுத்துள்ளேன். அவர்களுடைய நலத்தையும் நன்மையையும் அவள் பார்த்துக் கொள்வாள்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# சுவாரஸ்ய பகிர்வு KGG

வாட்ஸ் அப் குழுக்களில், நதிமூலம் ரிஷிமூலம் போல சில சுவாரஸ்ய பகிர்வுகள் கண்ணில் படும். ஒவ்வொருவரும் வேறொருவருக்கு அதை பகிரும்போது அதை ஒரிஜினலாக எழுதியவர் பற்றிய விவரங்கள் தேய்ந்து காணாமல் போய்விடும். அல்லது சிலர் சுவாரஸ்யத்திற்காக அல்லது மற்றவர்கள் கவனத்தை ஈர்க்க ஆங்காங்கே மானே / தேனே தெளித்து - சுஜாதா பெயரில் அல்லது மறைந்த பிரபல எழுத்தாளர்கள் பெயரில் அனுப்பிவிடுவார்கள். மூல ஆசிரியரைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகிவிடும்.

எனக்கு சென்ற வாரம் வந்த ஒரு பகிர்வை (என் அண்ணன் பையன் அனுப்பியது) இங்கே கொடுக்கிறேன். அண்ணன் பையனுக்கு அனுப்பியவர் பெயர் ஆறுமுகம் சக்திவேல் என்று கூறினார்.

*** *** ***

**அல்வா வேண்டும்' என்று கேட்டால், அவர் மிகப்பெரிய பணக்காரர் என அர்த்தம்... அனைவரும் அவரையே பார்ப்பார்கள்... அந்தக் கால 'ஆஹா ஓஹோ' சுவைமிகு ஹோட்டல்கள் நிறைந்த சென்னை!**

**'மதராஸ்' என அழைக்கப்பட்ட அக்காலம் முதல் சென்னை என அழைக்கப்படும் இக்காலம் வரை ஓகோ என சுவையாக சூடாகப் பேசப்பட்டு வரும் உணவு விடுதிகள் அதாங்க ஹோட்டல்கள் பல உண்டு நமது தருமமிகு சென்னையில்! அன்றைய சென்னை நகரம் இன்றைய அளவை விட மிகவும் சிறியது. இன்று பிரபலமாக விளங்கும் பல பகுதிகள், அன்று காடாகவும் கட்டாந்தரையாகவும் தோப்புகளாகவும் இருந்திருக்கின்றது.**

உணவு விடுதிகள் பெரும்பாலும் 'டவுன்' என்று அழைக்கப்படும் வடசென்னைப் பகுதியில்தான் இருந்தன. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்த நாளில் கல்லூரிகள், ஆபீஸ்கள், நீதிமன்றங்கள் எல்லாம் இந்த 'டவுன்' பகுதியில்தான் இருந்தன.

பெரும்பாலான விடுதிகளின் வாசலில் 'பிராமணாள் காபி ஓட்டல்' பலகைகள் தொங்கும். இந்த வழக்கம் 1950-வரை நீடித்திருந்தது!

தங்கசாலைத் தெருவில் 'காசி பாட்டி ஓட்டல்' என்று ஒரு ஓட்டல் இருந்தது. காசிக்குச் சென்று வந்த ஒரு பிராமண அம்மையார், போற இடத்துக்குப் புண்ணியம் கிடைக்குமென்று இந்த உணவு விடுதியைத் தொடங்கினார். அவருடைய சமையல் சுவையாக இருந்ததால் கூட்டம் சேர ஆரம்பித்தது. அந்த நாளில் உணவு விடுதிகளை நடத்துபவர்கள் 'தாங்கள் செய்வது வியாபாரமல்ல... அன்னதானம்' என்றுதான் நினைத்தார்கள். 'லாபத்தைவிட புண்ணியம்தான் பெரிது' என்று நம்பினார்கள். அதனால்தான் அந்த நாளில் 'அளவுச்சாப்பாடு' என்ற பேச்சே கிடையாது. காசி பாட்டி ஓட்டலில் எடுப்புச் சாப்பாட்டின் விலை இரண்டணா. நெய் தாராளமாகவே பரிமாறப்படும்.

அன்றைய 'மெட்ராஸ் பிரசிடென்ஸி' என்று அழைக்கப்பட்ட சென்னை மாகாணம், இருபத்தாறு ஜில்லாக்களைக் கொண்டது. அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் நாலாயிரம் வக்கீல்கள் இருந்தனர். நீதிமன்றத்துக்கு வரும் கூட்டம் மிகவும் அதிகம். அவர்களை நம்பி நடத்தப்பட்ட உணவு விடுதிகள் பல உண்டு.

தம்புச்செட்டித் தெருவில் இப்படிப்பட்ட உணவு விடுதிகள், தஞ்சாவூர், உடுப்பி, பாலக்காடு ஆகிய ஊர்களைச்

சேர்ந்தவர்கள் கைகளில்தான் இருந்தன. தம்புச்செட்டித் தெருவில் 'மனோரமா லஞ்ச் ஹோம்' ஏ.நாராயணஸ்வாமி ஐயர் என்பவரால் 1920-இல் தொடங்கப்பட்டது. இங்கு அனைத்துமே நெய்யில்தான் செய்யப்படும்.

வக்கீல் குமாஸ்தாக்கள் சங்கத்தினர், இந்தத் தெருவில் ஒரு கேன்டீனைத் தொடங்கினர். இந்த விடுதியில் வியாபாரம் பிற்பகல் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரைதான். இரண்டு மணிக்குப் பிறகு மிஞ்சியிருக்கும் இட்லி, போண்டா, வடை போன்றவற்றைப் பாதி விலைக்கு விற்று விடுவார்கள். 'தம்புச்செட்டித் தெருவில் சிற்றுண்டி உணவகம் வைத்தால் லாபம் தரும்' என்றொரு நம்பிக்கை பலரை இந்தத் தெருவுக்கு அழைத்தது. இந்த நாளில் 'சரித்திரம் படைத்த ஓட்டல் சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்ட 'தாசப்பிரகாஷ்' புகழ் கே.சீதாராமராவ் இங்குதான் வளரத் தொடங்கினார்.

சீதாராமராவ் இந்தத் தெருவில் ஒரு லாட்ஜையும் கட்டினார். அது மட்டுமல்ல... தனது பணியாளர்களை சென்ட்ரல், எக்மோர் ஸ்டேஷன் போன்ற இடங்களுக்கு அனுப்பி, சென்னைக்கு வரும் ரயில் பயணிகளைத் தன் விடுதிக்கு அழைத்து வர ஏற்பாடுகளைச் செய்வார். இன்று உலகளவில் மிகப் பிரபலமாக இருக்கும் 'மசாலா தோசை'யைச் சென்னைக்கு அறிமுகப்படுத்தியவர் இவர்தான். நெய்யில் செய்யப்பட்டு, 'மைசூர் மசாலா தோசை' என்று அழைக்கப்பட்ட இதன் விலை அரையணா.

அன்று ஓர் இந்திய ரூபாய்க்குப் பதினாறு அணாக்கள். ஒரு அணாவுக்கு நாலு காலணா அல்லது பன்னிரண்டு தம்பிடிகள். அதாவது, ஒரு ரூபாய்க்கு 192 தம்பிடிகள். பன்னிரண்டு தம்பிடிகள் கையில் இருந்தாலே, வயிறு நிறையச் சாப்பிடலாம். 'மைசூர் போண்டா' என்று

அன்றுபோல இன்றும் அழைக்கப்படும் இந்தச் சுவையான சிற்றுண்டியைச் சென்னைக்குக் கொண்டு வந்தவரும் சீதாராமராவ்தான்.

உடுப்பி சமையல் முறையில் சாம்பார், ரசம் ஆகியவற்றில் வெல்லத்தைச் சற்றுக் கலப்பார்கள். இதற்குத் தனியான சுவை உண்டு. இரண்டு இட்லிக்கு இரண்டு பக்கெட் சாம்பார் சாப்பிடுபவர்களும் அந்த நாளிலும் உண்டு. 'நான் இரண்டு இட்லி, இரண்டு பக்கெட் சாம்பார் ஆசாமி' என்று சொல்லிப் பெருமைப்படுவதில் அந்த நாளில் பலர் இருந்தனர்.

'பிராட்வே' என்றழைக்கப்படும் குறுகிய சாலையிலும் பிரபலமான உணவகங்கள் இருந்தன. இந்தத் தொழிலில் முன்னோடியாகக் கருதப்படும் சங்கர ஐயர், இங்கு 'சங்கர் கபே' என்ற பெயரில் ஒரு உணவகத்தைத் தொடங்கினார். இது மிகவும் பிரபலமடைந்தது. இந்த இடத்தில்தான் பின்னாளில் 'அம்பீஸ் கபே' இயங்கத் தொடங்கியது.

இன்று முழுமையாக மறக்கப்பட்ட மற்றொரு உணவகம் 'கராச்சி கபே'. இதைத் தொடங்கியவர்கள், சென்னையின் மிகப் பிரபலமான துணி வியாபாரிகளான கிஷன்சந்த்ஸ்-செல்லாராம்ஸ் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களெல்லாம் சிந்திக்காரர்கள். கராச்சியிலிருந்து வந்தவர்கள்.

இது, ஹை-கோர்ட்டுக்கு எதிரில், இன்றைய பாம்பே மியூச்சுவல் கட்டடத்துக்கு அருகே இருந்தது. சென்னை நகரத்திலேயே முதன்முறையாக ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட ஒரு தனியறை அந்த நாளில் சரித்திரம் படைத்தது. இந்த உணவகத்தின் வாசலில் நின்று வேடிக்கை பார்ப்பதுண்டு. 'உள்ளே போனா குளிருமாமே" என்று

மூக்கின்மேல் விரலை வைத்தவர்களும் உண்டு. இந்த உணவகத்தின் ‘கராச்சி அல்வா’ அன்று மிகப் பிரபலம்.

அந்த நாளில் இனிப்புப் பண்டங்களுக்கு வடஇந்திய அடையாளத்தோடு பெயர்கள் வைப்பது வழக்கம். காசி அல்வா, டெல்லி பாதுஷா, கல்கத்தா மல்கோவா, பாம்பே அல்வா... இப்படிப் பல! இவற்றின் விலை இரண்டணாதான்.பாதாம் அல்வாவுக்கு என்றுமே தனிச் சிறப்பு உண்டு. அதன் விலை மூனணா.

‘இந்த அல்வா வேண்டும்’ என்று ஒருவர் கேட்டால், அவர் மிகப் பணக்காரரர் என்று அர்த்தம். எல்லோரும் அவரையே பார்ப்பார்கள். பாதாம் அல்வா என்றால், உடனே மனதில் பளிச்செனத் தோன்றுவது, ‘கோயம்புத்தூர் கிருஷ்ண ஐயர்’தான். மிகப் பிரபலமான இந்த உணவகம் திருவல்லிக்கேணி பைகிராஃப்ட்ஸ் சாலையில் (பாரதியார் சாலை) இருந்தது.

இதன் உள்ளே சென்றால், படாடோபம் இல்லாத ஒரு நடுத்தர வீடு போலத்தான் இருக்கும். ஆனால், இங்கு வக்கீல்கள், எழுத்தாளர்கள், சினிமாவுலகப் பிரமுகர்கள் அன்றைய சென்னை நகரத்தின் பல பிரபலங்களை அடிக்கடிப் பார்க்கலாம். சரித்திரம் படைத்த எஸ்.எஸ்.வாசன், கல்கி போன்றவர்களும் இங்கு வருவதுண்டு. பாதாம் அல்வாவைச் சாப்பிடுவதற்கென்றே சென்னை நகரின் பல பகுதிகளில் இருந்தும் இங்கு வருவார்கள்.

அதுபோலவே, மயிலாப்பூரில் ‘ராயர் ஓட்டல்’ மிகவும் பிரபலம். ‘இங்கு இட்லி சாப்பிட்டால்தான் காரியங்கள் சரியாக நடக்கும்’ என்று அந்த நாளில் நினைத்தவர்களும் ஓட்டலுக்கு ரெகுலர் கஸ்டமர்கள். இதில்

சினிமாக்காரர்களும் உண்டு. அவர்களில் ஒருவர், ஜெமினி கணேசன்!

அதுபோலவே, தங்கசாலைத் தெருவில் ‘சீனிவாஸ் பவன்’ மிகவும் புகழ்பெற்றது. இந்த உணவகம் மாலை 7 மணிக்குத் திறக்கப்படும். நள்ளிரவைத் தாண்டி மூடப்படும். இங்கு விசேஷம் என்ன ஈன்றால், பூரியுடன் ‘பாசந்தி’தான் கொடுப்பார்கள். உருளைக்கிழங்கு கறி வேண்டுமென்றால், முதலிலேயே சொல்ல வேண்டும். இல்லையென்றால் பாசந்திதான் வரும். இங்கு பூரி – பாசந்தி சாப்பிடுவதற்காக மயிலாப்பூரிலிருந்து பலர் இரவில் காரில் வருவார்கள்.

உணவக வியாபாரம் சிலருக்குப் புண்ணியத்தை மட்டுமல்லாமல், பணத்தையும் வாரிக் கொடுத்தது. பெருமளவில் வளர்ச்சி கண்டவர்கள், வி.ஆர்.ராமநாத ஐயர், சி.எம்.சர்மா, கே.சீதாராம் ராவ் ஆகியோர்.

ஐயருக்கும், சர்மாவுக்கும் சென்னை நகரத்தில் நூறு வீடுகள் சொந்தமாக இருந்ததாக அந்த நாளில் பரபரப்பாகப் பேசுவார்கள். அதே அளவில் வளர்ந்தவர், உடுப்பியைச் சேர்ந்த கே.கிருஷ்ணாராவ்.

இன்று உலகெங்கும் புகழைப் பரப்பிய உட்லண்ட்ஸ் உணவகத்தையும் விடுதியையும் நிறுவியவர் இவர்தான். இட்லி மாவு அரைக்கும் சாதாரண தொழிலாளியாகச் சென்னைக்கு வந்தவர். மவுண்ட் ரோடு பகுதியில் ‘உடுப்பி கிருஷ்ண விலாஸ்’ என்று பல பெயர்களில் வெற்றியைக் கண்டவர்.

சில கூட்டாளிகளுடன் சேர்ந்து, ராயப்பேட்டை பகுதியில் ஒரு ஜமீன்தாருக்குச் சொந்தமான இடத்தை வாங்கி, உட்லண்ட்ஸ் ஓட்டல் நிறுவினார். இது, இன்றைய அளவிலும் இயங்குகிறது. அதற்குப் பிறகுதான்

ராதாகிருஷ்ணன் சாலையில் இன்னொரு ஓட்டலைத் தொடங்கினார்.

தேவராஜ முதலித்தெரு பகுதியில் வெங்கட்ராம ஐயர் உணவகம் இருந்தது. அங்கு சாப்பாடு பிரபலம். தரையில் உட்கார்ந்து கொண்டுதான் சாப்பிட வேண்டும். மேஜை, நாற்காலி எல்லாம் கிடையாது. இங்கு என்ன விசேஷம் என்றால், ஒவ்வொரு நேரத்துக்கும் ஒரு காய் கிடைக்கும்.

கூட்டம் அலைமோதுவதால் பரிமாறப்படும் காய்கறிகள் உடனே தீர்ந்து விடும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உருளைக்கிழங்கு பொரியல் என்றால், அரைமணி நேரம் கடந்து சென்றால் வாழைக்காய் பொரியல் பரிமாறப்படும். அடுத்து கருணைக்கிழங்கு பொரியல் கிடைக்கும். பலர் டிக்கெட் வாங்குவதற்கு முன்பு, ‘இப்ப என்னய்யா பொரியல்?’ என்று கேட்டு வாங்குவார்கள். அவ்வளவு பிரபலம் இந்த வெங்கட்ராம ஐயர் ஓட்டல்.

இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற கால கட்டத்தில், ‘ஜப்பான்காரர்கள் சென்னையில் அணுகுண்டு போட்டு விடுவார்கள்’ என்ற பயத்தினால் நகரமே காலியானது. கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் மூடப்பட்டன. சென்னை உயர்நீதிமன்றம் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டது.

இந்த குண்டு பயத்தினால், டவுன் பகுதியில் பல உணவகங்கள் மூடப்பட்டன. அந்தப் பயம் நீங்கிய பிறகு, மீண்டும் தொடங்கப்பட்டன. ஆனால், தொடங்கப்படாமலே மறைந்தது ‘கராச்சி கபே’!

(பதிவின் ஒரிஜினல் சொந்தக்காரர் எங்களை மன்னிக்கவும்!)

மீண்டும் பொருளடக்கம் பகுதி செல்ல ...

# ஞாயிறு படங்களும் வாசகர் கைவண்ணமும்!




**Kayjees Sunday pix shots**



## நெல்லை கண்ட சிலுக்கு




**மேலே கண்ட படத்தில் தெரிந்த நாட்டிய உருவத்தை உடனே வரைந்து அனுப்பிவிட்டார் நம் நெல்லைத்தமிழன்!**



## உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.

எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.

இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை, engalblog@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !




**செம்பருத்தியை சிறையிலிட்டவர் யார்?**